


"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி.

| | | |
|---|---|---|
| மாலை 1 | ஞாயிறு 16-10-38 வெகுதான்யஹு புரட்டாசிமீ 30வ | முத்து 3 |


# பொருள் அடக்கம்

---


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆந்திர மாகாணம் | .... | 50 |
| 2. | குறிப்பு | ... | 51 |
| 3. | போகிற போக்கில் | ... | 52 |
| 4. | சிட்டை | ... | 53 |
| 5. | கோனார் பாட்டு (ஸ்ரீ சுத்தானந்த பாரதி) | ... | 55 |
| 6. | இரண்டு சிமிழ் (ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி) | ... | 56 |
| 7. | எச்சில் (ஸ்ரீ ந. பிச்ச மூர்த்தி) | ... | 57 |
| 8. | கலையும் ஒழுக்கமும் (வ. ரா.) | ... | 59 |
| 9. | விருந்து வேண்டாம் ("ரஸிகன்") | ... | 61 |
| 10. | கற்பனை வீடு (ஸ்ரீ எஸ். எஸ். ராமசாமி) | ... | 63 |
| 11. | மாமூது ("வஸந்தன்") | ... | 65 |
| 12. | வலை வீச்சு | ... | 68 |
| 13. | சினிமாச் சுருள் | ... | 71 |


---

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,

# ஆந்திர மாகாணம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்திற்குப் பிறகு ஆந்திர மாகாணக் கிளர்ச்சி ஒரு மட்டுக்கு ஓய்ந்திருந்தது. சென்னை சர்க்காரும் சட்டசபையில் நிறைவேறிய மாகாணப் பிரிவினை தீர்மானத்தை இந்தியா காரியதரிசிக்கு அனுப்பி யிருக்கிறதாகத் தெரிகிறது. சென்ற வாரம் சென்னையில் கூடிய ஆந்திரமகா சபையில் மறுபடியும் பிரிவினைப் பிரச்னை வந்துவிட்டது. உடனே அதை செய்துவிட வேண்டுமென்றும், தாமதம் செய்வது பூராவும் ஆந்திர தேசத்திற்கு நஷ்டமென்றும், பிரிவினைக்கு முன் கூட்டிய திட்டமாக, துங்கபத்திரா திட்டம், ஆந்திர சர்வகலாசாலை, விசாகை வைத்தியக் கல்லூரி, மசூலிப்பட்டணம் துறைமுகம், இவை விஷயமாக உடனே விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பமாக வேண்டுமென்றும் ஆந்திரப் பிரமுகர்கள் பேசினார்கள்.

மாகாணங்களை பாஷாவாரியாகப் பிரிக்க வேண்டுமென்பதில் யாருக்குமே ஆட்சேபணை இருக்க முடியாது. தமிழர்களுக்குக் கிடையவே கிடையாது என்று நமது ஆந்திர சகோதரர்களுக்கு உறுதி கூறுகிறோம். ஏனெனில், ஆந்திரப் பிரிவினைக்கு தமிழர்கள் அவ்வளவு இஷ்டப்பட வில்லை என்று தொனிக்கும் படியாக, சில ஆந்திர சகோதரர்கள் ஆவேசத்துடன் பேசுகிறார்கள். மாகாணப் பிரிவினையில் ஆந்திரர்களுக்கு எவ்வளவு சௌகரியமோ அவ்வளவு சௌகரியம் தமிழர்களுக்கும் இருக்கிறது. ஆகையால் அவர்கள் அதை ஒருக்காலும் எதிர்க்க மாட்டார்கள். மேலும் காங்கிரஸ் பிறந்த நாள்முதல் அதைச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறது; காங்கிரஸ் சர்க்காரும் பிரிவினைத் தீர்மானத்தை ஆமோதித்து அந்த வாக்கை நிறைவேற்றி விட்டார்கள்.

சென்னை நகரம் ஆந்திரர்களுக்குத்தான் சொந்தமானது, பிரிவினையில் அது ஆந்திர மாகாணத்தில்தான் சேரவேண்டும் என்ற வாதம் தீவிரமாக மகாசபையிலும் நடந்தது. சிலர் சரித்திர பூர்வமாக ஆதாரங்களும் எடுத்துக் காட்டினார்கள். தமிழர்களும் தங்கள் பாத்தியதையை அதே மாதிரி சரித்திர பூர்வமான ஆதாரங்களுடன் ஸ்தாபிக்கக் கூடும்.

ஆனால் சென்னைமீது என்ன இந்த மோகம்? நேற்று உற்பத்தியான இந்த நகரத்தில் நமது நாட்டு நாகரிகத்தின் தொடர்பைக் காட்டுவதான அம்சம் ஏதாவது இருக்கிறதா? ஒரு மாகாணத்திற்கு தலைநகராக அமைய அதற்கு என்ன பிறவி பூர்வோத்திரச் சிறப்பு இருக்கிறது? நமது சரித்திரத்தில் அது என்றாவது இதற்குமுன் தோன்றியிருக்கிறதா?

ஆந்திரரும் தமிழரும் தனி மாகாணங்கள் அடைந்தால், சென்னை இருநாட்டினருக்குமே தலைநகராக இருக்க லாயக்கில்லை யென்பது நமது தீர்மானமான கொள்கை. ஆந்திரர்கள் ராஜமகேந்திரத்தையோ பெஜவாடாவையோ தலைநகராகக் கொள்ளட்டும். தமிழர்கள் தங்கள் நாகரிகம் பிறந்து வளர்ந்த தென்நகரங்களுக்குப் போகட்டும். தஞ்சையோ மதுரையோ தான் தமிழ் மாகாணத்திற்குத் தலைநகராக இருக்கும் அருகதையுள்ளது. அங்குதான் அதன் சரித்திரம் பிறந்தது; அதன் கலை வளர்ந்தது; வீரம் வாழ்ந்தது. அந்த மண்தான் தமிழனுக்கு உணர்வு கொடுக்கக்கூடியது, உற்சாகம் ஊட்டக் கூடியது. அதன்மேல்தான் அவன் மறுபடியும் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

தலைநகர் இரண்டு நாடுகளுக்கும் எல்லைப் புறத்தில் இருப்பது பொருந்தாதது; மாகாணத்தின் தலைநகர் சரித்திரம் பெற்ற பட்டணமாக இருப்பதுடன், கூடிய வரையில் அதன் நடுவில் இருப்பதும் அநேக விஷயங்களில் சௌகரியமாக இருக்கும். ஒருவிதத்தில் சென்னை நகரம் தமிழருக்கும் ஆந்திரருக்கும் எட்டாக்கை என்றே சொல்ல வேண்டும்.

சென்னையில் இவ்வளவு கட்டிடங்கள் கட்டியாகி விட்டதே, இவ்வளவு பணம் செலவு செய்து நகரத்தை சிருஷ்டி செய்தாகி விட்டதே என்பதற்காக, நமது வளர்ச்சிக்கு ஒத்ததான நாட்டின் ஒரு நடுநாயக நகரைக் கொள்ளாமல், இங்கே இந்த நீரற்ற இடத்தில் நெருக்கமுற்றுப் புழுங்குவானேன்?

## ஆரம்பித்து விட்டார்!

ஜெகோஸ்லோவேகியாவை ஹிட்லர் பிரித்தெடுத்துக் கொள்ளும் விஷயமாக பிரிட்டிஷ் தொழிற்கட்சி ஏதோ சொல்லி விட்டதாம். ஹிட்லருக்குக் கோபம் பிய்த்துக்கொண்டு வந்து விட்டது. "ஆங்கில ராஜதந்திரிகள் அவர்களுடைய யோசனைகளை தங்களுக்கே வைத்துக் கொள்ளட்டும்; இங்கே யெல்லாம் தலையிடக் கூடாது. அதை நான் அனுமதிக்க மாட்டேன்!" என்ற ரீதியாக கர்ஜிக்கிறார்.

ஹிட்லருடைய கையெழுத்தின் கீழ் சேர்ந்து கையெழுத்துப் போட்டு "ஒப்பந்தம் செய்து கொண்டு வந்து விட்டேனே!" என்று ஆர்ப்பாட்டம் செய்து ஒப்பந்தக் காகிதத்தை பிரித்தெடுத்துக் காட்டின சேம்பர்லேனுக்கு இது எப்படித் தைத்ததோ? ஒருவேளை, தான் என்ன செய்தாலும் பிரிட்டன் வாய்திறக்கக் கூடாது என்று ஹிட்லர் சேம்பர்லேனிடம் சொன்னது மியூனிச் ஒப்பந்தத்தில் எழுதாத ஷரத்துகளில் ஒன்றோ?

* * *

## தனிப்பண்பு வளர்ச்சி

ஆந்திர மகாசபையில் தலைமை வகித்துப் பேசிய பொழுது, ஸர் ராதாகிருஷ்ணன் ஆந்திர மாகாணப் பிரிவினை இயக்கத்தின் காரணம் துவேஷ புத்தியல்ல வென்றும் ஆந்திரப் பண்பு தனிமை கொண்டு தனிச் சிறப்புடன் வளர வேண்டுமென்பது தான் என்றும் வற்புறுத்தினர்.

நாமும் நமது ஆந்திர சகோதரர்களுக்கு ஒரு உறுதி கூறுகிறோம். ஆந்திரர்களைப் போல தமிழர்கள் மாகாணப் பிரிவினைக்கு அவ்வளவு கிளர்ச்சி செய்ய வில்லை யென்றால் அது ஆந்திர தேசத்தை பிரித்து விட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தால் அல்ல; பண்பு வளர்ச்சி தனிமை கொள்வதைப்பற்றி ஸர் ராதாகிருஷ்ணன் ஆந்திரத்திற்குச் சொன்னது தமிழ் நாட்டிற்கும் பொருத்த முடையது தானே?

* * *

## மதுவிலக்கு வெற்றி

அபிவிருத்தி இலாகா பிரசுரித்துள்ள ஒரு அறிக்கையில் சேலத்தில் மதுவிலக்கு பெற்றிருக்கும் வெற்றியை சேலம் ஜில்லா கலெக்டர் விவரித்துக் கூறுகிறார். முக்கியமாக ஹரிஜனங்களே அதன் மூலம் அதிகமாகப் பயன் அடைந்திருக்கிறார்களாம்.

இதுவரையில் குடியில் கரைந்து போய்க் கொண்டிருந்த காசை சேமித்து வைத்துக்கொண்டு நல்ல உணவை முதல் முதலாகக் கண்ணில் பார்க்கிறார்களாம்.

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகாவின் ஒரு பகுதியில் வாசம் செய்யும் நண்பர் ஒருவர் சேலம் ஜில்லா கலெக்டரின் அறிக்கை மிகவும் நிதானமாக எழுதப் பட்டிருக்கிறது என்று கூறுகிறார். மக்கள் உண்மையிலேயே மிகவும் சௌகரிய தசையை அடைந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டு உள்ளப் பூரிப்பு கொள்ளுகிறோம்.

வருகிற தீபாவளி சேலம் ஜில்லா மக்களின் வாழ்க்கையில் ஒரு புனிதமான தீபாவளி. குடிமயக்கம் அற்ற இந்த வருஷம் குடிகள் கோடியுடுத்து கொண்டாட்டம் கொள்ளுவார்கள். நாடு பூராவுக்கும் இந்த நாள் என்று கிட்டும்?

* * *

## தொழில் அபிவிருத்தி

தொழில் மந்திரிகள் மகாநாட்டு முடிவுகளின்படி வேலைகள் ஜரூராக நடப்பதாகத் தெரிகிறது. திட்டங்களை வகுக்கும் கமிட்டிக்கு பண்டித ஜவஹர்லாலை தலைவராக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதாம். ஸர் விச்வேசுவரய்யாவும் ஆசிரியர் மேகநாத சாஹாவும் கமிட்டியில் இருப்பார்கள் என்ற தகவலே வேலை எவ்வளவு திறமையுடன் நடக்கும் என்பதற்கு அத்தாட்சி.

இந்தியாவில் மோட்டார்கள் செய்யும் விஷயமாகவும் சில தீர்மானமான முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மோட்டார்கள் செய்யும் தொழிற்சாலை பம்பாயில் இருக்கும். தற்காலம் வருஷம் 10,000 கார்களும் 5000 டிரக்குகளும் செய்யக்கூடிய அளவு கருவிகள் மட்டும் ஸ்தாபிக்கப்படும். மிகவும் பிரபலமான ஒரு வெளி நாட்டு மோட்டார் உற்பத்தி ஸ்தாபனம் வேண்டிய நுணுக்க ஆலோசனைகள் கூறும்.

நண்பர்களே, சென்றவாரம் சூடேடன் பிரிவு பட்டபாடு இந்த வாரம் சென்னைமா நகரம் பட்டு விட்டது. செயல் பொழிவா யிருந்தால் என்ன, சொற்பொழிவா யிருந்தலென்ன? ஆந்திர மகாசபை சென்னையில் கூடி, சென்னையைத் தங்கள் மாகாணப்பிரிவில் சேர்ப்பதே நலமென்ற தீர்மானத்தைக் கொண்டது.

* * *

கூவம் ஆற்றினுல் சென்னைக்கு என்ன ஆதாயம், என்ன பிரயோஜனம் என்று நான் வெகு காலமாய் சிந்தித்தது உண்டு. இப்பொழுது அதன் பிரயோஜனம் கொஞ் சம்கொஞ்சமாகத் தெரிய வருகிறது. தமி ழர்களுக்கும், ஆந்திரர்களுக்கும் பாக பத்திரமாகி பூகோளப்படம் போடும் போது, சென்னைமா நகரை இரண்டாகப் பிரித்து கூவம் மகாநதிக்கு வடக்கு ஆந் திர தேசம், தெற்கு தமிழகம் என்று பிரிவினை செய்ய வசதியான எல்லையாக உதவுகிறது. ஈசன் செயலுக்கெல்லாம் ஒரு நோக்கம் எக்காலத்திலும் உண்டென் பது இதனுல் மெய்யாகிறது. சென்னை முழுவதையும் ஆந்திர தேசத்திலேயே சேர்த்து விடவேணுமென்று ஐகோர்ட்டு கட்டிடத்தையும், சர்வகலாசாலைக் கட்டிடத் தையும் பார்த்து விட்டு சில ஆந்திரர்கள் பரவசத்துடன் சொல்லுகிருர்கள். சென்னையைப் பிறக்க வைத்ததும் தாங் களே, ஊட்டி வளர்த்ததும் தாங்களே என்று சரித்திரக் கல்வி முறையில் பழ கிய சில ஆந்திரர்கள் அபிமானத்துடன் சொல்லுகிருர்கள். "கும்பினி" நாளில் பிறந்த சென்னை சந்திரகிரி ராஜாவின் கைக்குழந்தை யல்லவா? கடைகுட்டி அல் லவா, காவிரி தீரத்தில் பிறந்த நான் சென்னைமா நகரை ஆந்திர தேசத்திற்கு கொடுக்க தயாராயிருக்கிறேன். அது மூலமாவது கோபத்தில் பல தமிழ் நண் பர்கள் மறுபடியும் சோழ நாட்டை நாடி, தாங்கள் பிறந்த அழகிய, ஊருக்குத் திரும்பி வருவார்களென்று நம்புகிறேன்.

* * *

ஆனுல் உண்மையில்—நானும் இந்திய சரித்திரம் கொஞ்சம் வாசித்திருக்கி றேன்—தமிழ் நாட்டின் புராதன வட எல்லை வேங்கடாத்திரி மலையும் ஸ்வர்ண முகி நதியும். பாஷை நீங்கலாக இரண்டு நாடுகளுக்கும் நாகரிகத்தில் பிரமாதமான அம்சங்களில் வித்தியாசங்கள் ஒன்றும் கிடையாது. விழல் பொழி வைத்தால் போதும். வரப்பிட்டுப் பிரிக்கவேண்டாம். 30லக்ஷம் ஆந்திரர்கள் தமிழ் நாட்டிலிருக் கிருர்கள். அவர்கள் தமிழையே தாய் பாஷையாக இனிமேலும் கொண்டாடி தமிழ் நாட்டின் மேன்மையை இன்னும் மேன்மைப் படுத்த வேண்டும். அம்மா திரியே ஆந்திர தேசத்திலிருக்கும் தமி ழர்கள் தமிழை மறந்து தெலுங்கையே தாய் பாஷையாகக் கொண்டாட வேண்டும். அப்பொழுதுதான் வேற்றுமையில் ஒற் றுமை யேற்பட்டு நமது மாகாண வாழ்வு கார சாரமாய் விளங்கும்.

* * *

எவ்விதத்திலும் கூடிய சீக்கிரத்தில் ஆந்திர மாகாணப் பிரிவு ஏற்பட்டு நடை பெற வேணுமென்பது என்னுடைய 20 வருஷத்துக்கொள்கை. இதை வற்புறுத்தி பல வருஷங்களுக்கு முன்னமே எவரும் நினையாத காலத்தில், பெஸண்ட் அம்மை நடத்திவந்த "காமன் வீல்" என்ற பத் திரிகையில் கட்டுரைகள் எழுதியிருக்கி றேன். நமது பாரதமாதா முழுதிட்டமாய் எவ்விதத்திலும் மேன்மையடைய வேணு மென்ருல், முக்கியமாக தென் இந்தியாவில் பாஷையை அனுசரித்தே மாகாணப்பிரிவு சீக்கிரம் ஏற்பட வேணும். அப்பொழுது தான் நமது வாழ்வில் ஸ்வஜாதி அபிமானம் மேலிட்டு, பாலில் பிறந்த வெண்ணைபோல் நட்பும், பிசுக்கும் ஏற்படும். கடலைக் கொட் டையிலிருந்து ஆட்டியது லேபில் ஒட்டினு லும் நெய்யாகுமோ?

நமது வாழ்வில் அப்பொழுதுதான் நய மும், சுகமும், மணமும் உண்டாகும். ஆகையால் சென்னை யாருக்குச் சேரவேண் டியது என்ற வீண் வாக்குவாதத்தில் காலத்தைச் செலுத்தாமல் உடனே மாகா ணப்பிரிவை சர்க்கார் தீர்மானம் செய்து அமுலுக்குக் கொண்டு வருவார்களென்று நம்புகிறேன்.

* * *

நான் ஒரு சிநேகிதரிடம்—அவரும் ஆசிரியர், ஆந்திர ஆசிரியர்—நேற்றைய தினம் பேசிக்கொண்டிருந்த பொழுது, அவர் சொன்ன யோசனை மிகவும் ஒப்புக் கொள்ளத்தக்கதாயிருந்தது. பல பாஷைக் காரர்களும், ஜாதிகளும் வந்து குடிகொண் டிருக்கும் சென்னைபோன்ற பிரதான நகரங் களை ஒரு மாகாணத்தோடும் சேர்க்காமல் தனியாக ஓர் கமிஷனருக்கு உள்படுத்தி ஆட்சி புரியவேண்டும். கவர்னரிருந்த ஸ்தா னத்தில் கமிஷனரிருந்தால் என்ன, கலெக் டர் இருந்தால் என்ன? இதில் யாருக்கு ஆக்ஷேபணை? இந்த விஷயம் லேடி வில்லிங் டன் காதில் பட்டால் ஒரு வேளை ஆக்ஷே பிக்கலாம். தான் சீர்திருத்தி செப்பனிட்ட 'கவர்ண்மெண்ட் ஔசில்' இப்படிப்பட்ட குடியையா வைக்கிறது என்றுகேட்கலாம்! கேட்கட்டும் பாதகமில்லை. தற்காலம் எனது நண்பர் ஆந்திர ஆசிரியர் சொல்லுக்கு செல்வாக்கு குறைவில்லை. அதை நானும் ஆமோதிக்கிறேன். பிறகு!

மேழிச் செல்வத்தில் வளர்ந்த நம் நாக ரிகத்திற்கு சென்னை போலொத்த நகரங் கள் ஒருநாளும் உண்மையில் ராஜதானி யாகா. சென்னை—க்ஷேத்திரமா? புரா தனப் பட்டணமா, நதி தீரமா? புது மாகாண மத்தியா, வாஸத்திற்கு வசதியா, உடம்புக்கு ஆரோக்கியமா? தொழிலுக்கும் உழவுக்கும் பிறந்த இடமா? ஆங்கில அர சாட்சியுடன் தட்டுக்கிட்டு அவசரத்தில் பிறந்த நொண்டிக்குழந்தை. ஜில்லா கலெக் டர் வசம் ஒப்புவிப்போம். அவர்தான் சரியான கார்டியன். மணி.

---

## சிட்டை

### அக்டோபர் 8

ஸெக் தேசத்தில் நாலாவது பகுதியில் குழப்பம். விஷயம் என்னவென்ருல் அப் பகுதியிலுள்ள ஜனங்கள் ஹிட்லரை உத் சாகத்துடன் வரவேற்கும்போது ஹிட் லர் முகத்தில் ஒரு ரத்தக்காயம் உண்டா கிறது. ஜனங்கள் ஹிட்லர் மேல் பூமாரி பொழியும் போது ஒரு புஷ்பம் அவர் முகத்தில் விழுந்ததால் காயம் உண்டாகி விட்டதாம்! இனிமேல் புஷ்பத்தை ஹிட் லர் மேல் விட்டெறியக் கூடாது என்று உத்தரவு உடனே பிறந்திருக்கிறது!

இந்தக் கோலாகலங்களுக்கிடையில் ஆங் கில—இதாலி காதல் பேச்சு ஸ்வாரஸ்ய மாக நடந்து வருகிறது. பிரான்கோ தன் படையிலுள்ள அந்நியர்களில் கால்வாசிப் பேரை திருப்பி அனுப்பி விடுவதாகக் கூறுகிருர்.

இங்கிலாந்தில் பாதுகாப்பு சம்பந்தமாக தடபுடலான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று டைம்ஸ் பத்தி ரிகை கூறுகிறது.

காந்தியடிகள் ஸெக் தேசத்தைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுகிருர். அந்தத் தேசம் அஹிம்சையைக் கைக்கொண்டு மேலான சாவைத் தழுவி யிருக்கலாமே என்று கூறுகிருர்.

சென்னையில் ஆந்திரர்கள் மஹாசபை கூட்டி அமர்க்களமாக காரியாதிகளை நடத்துகிருர்கள்.

### அக்டோபர் 9

ஹிட்லர் பிரட்டன் தன் காரியத்தைக் கவனிக்கட்டும், ஜர்மனி விஷயத்தில் தலை யிட வேண்டாம் என்று ஒரு சூடு கொடுக் கிருர். ஆஸ்திரியாவில் பாதிரி இன்னி ஸரை நாஸிகள் தாக்கிக் காயப்படுத்துகி ருர்கள். நாஸிகள் மதத்தின்பேரில் அவ் வளவு பயபக்தி!

எகிப்து மாஜி பிரதம மந்திரி நஹாஸ் பாஷா பொதுக்கூட்டத்தில் நடந்த குழப் பத்தில் தாக்கப் படுகிருர்.

ஸெக் தேசத்தை ஹங்கேரி பூராவும் கடித்துத் தின்ன வருகிறது. ஸெக் வகையில்லாமல் "என்கையைத் தின்று விடாதே இதோ இருக்கிறது கால் அதைச் சாப்பிட்டு விட்டுப்போ" என் கிறது.

முஸ்லீம் லீக் கராச்சியில் கூடி பல தலை போகிற விஷயங்களை ஆராய்ச்சி செய்கி றது. காங்கிரஸ் மாகாணங்களில் சர்க் கார் முஸ்லீம் சகோதரர்களை படுத்துகிற தொந்தரவு சஹிக்க முடியவே யில்லை.

என்று பஞ்சாப் பிரதமர் முதலைக் கண்ணீர் விடுகிறார்.

அக்டோபர் 10

ஹங்கேரி ஒனுய் ஸெக்கின் பாக்கி உறுப்புக்களைக் கடித்து விழுங்குகிறது. பிரஞ்சு பத்திரிகைகள் ஹிட்லர் பேச்சுகளில் அபாயம் இருக்கிறதென்றும் குடியேற்ற நாடுகளுக்கும் அடிப்போட ஆரம்பித்து விட்டாரென்றும் 'குய்யோ முறையோ' என்று கத்துகின்றன.

பெல்ஜிய தளகர்த்தர் ஸோபியா நகர வீதியில் யாரோ ஒருவரால் சுட்டுக் கொல்லப் படுகிறார்.

சீனுவுக்கு அபரிமித வெற்றி. 20,000 ஜப்பானியர்களை சைனுபடை ஒழித்து விடுகிறது.

அக்டோபர் 11

பாலஸ்தீனத்தில் குழப்பம் தாங்க முடியவில்லை. இதே சமயத்தில் கெய்ரோவில் முஸ்லீம் காங்கிரஸ் கூடி நிலைமையை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

இப்படி முஸ்லீம் நாடுகள் கிலேசமடைந்திருக்கும் சமயத்தில் நமது வங்காள மந்திரி பஸ்லுல்ஹக் கராச்சியில் வெளுத்து வாங்குகிறார். இந்தியாவை முழுதும் அவர் ஜயித்து ராஜாவாக ஆவது பிரமாதமல்ல என்று மார்தட்டிக் கொள்கிறார்!

அக்டோபர் 12

சோவியத் ரஷியா பிரான்சின் நம்பிக்கைத் துரோகத்தை இடித்துக் காட்டுகிறது. மேலும், வின்டர்டன் என்ற ஆங்கிலேயப் பிரபு 'ரஷியா தன் பலஹீனத்தினுல்தான் ஸெக் தேசத்திற்கு உதவி செய்ய முன்வர வில்லை' என்று சொன்னதை ரஷியா ஆட்சேபித்து 'உங்களால் தான் ஸ்வாமி, நாங்கள் ஸெக் தேசத்திற்கு உதவி செய்ய முடியவில்லை' என்று உண்மையைக் கூறுகிறது. முஸ்லீம் காங்கிரஸ் கெய்ரோவில் கூடி பாலஸ்தீனத்திற்கு சுயேச்சை கொடுக்க வேண்டுமென்றும் யூதர்களை பாலஸ்தீனத்திற்குள் வராமல் தடுக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்கிறது. தென் சைனு மீது ஜப்பான் படை எடுக்கிறது.

பஞ்சாபில் மொஹஞ்சாடாரோ, என்னுமிடத்தில் நடந்த சரித்திர ஆராய்ச்சியிலிருந்து சில ரஸமான விஷயங்கள் தெரிய வருகின்றன. பழங்கால விக்ரகங்களும் சின்னங்களும் கண்டு எடுக்கப்படுகின்றன.

மகாத்மாகாந்தி எல்லைப்புறத்திலுள்ள உத்மான்ஸேயில் செஞ்சட்டைப் படையினரைக் கண்டு பேசி அஹிம்ஸையை அவர்களுக்கு விளக்கிக் கூறுகிறார்.

93,000 தமிழர்கள் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்கள் என்று ஒரு அறிக்கை கூறுகிறது.

அஸ்ஸாம் ஐரோப்பியர்களின் குரோத புத்தியைப் பற்றி போஸ் எடுத்துக் காட்டியதை கிரிப்பித்ஸ் என்ற துரை ஆட்சேபித்து ஒரு அறிக்கை வெளியிடுகிறார்.

அந்த அறிக்கையில் "எங்களுக்குக் குரோதமில்லை" என்று சொல்ல வந்தவர் 'மூளை இல்லை' என்று ருஜூப் படுத்தி விட்டுப் போகிறார்!

திருவாங்கூரில் சட்டமறுப்பு தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. ஸிம்லாவிலிருந்து வந்த ஒரு செய்தி ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் திருவாங்கூருக்குப் புறப்பட்டு விட்டதாகக் கூறுகிறது.

அக்டோபர் 13

ஜப்பான் இரண்டுமணி நேரத்தில் தென் சைனுவில் காலடி வைத்து விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் ரொம்பக் கோபமாக இதை ஆக்ஷேபித்து விட்டார்கள்!

லின்லித்கோ இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார்.

ஸிந்து பிரதம மந்திரி அல்லா பக்ஸ் முஸ்லீம் லீகில் சேர மறுக்கிறார். எனவே, ஸிந்து விஷயம் மறுபடியும் குழப்பத்தில் முடிகிறது.

# கோனூர் பாட்டு

(ஸ்ரீ சுத்தானந்த பாரதி)

ஊதும் புல்லாங் குழலைக் கோனாரே-இந்த
ஊரெல்லாம் பால்பொழியக் கோனாரே !
போது புலர்ந்ததையா கோனாரே—பசும்
புல் மணம் வீசுதையா—கோனாரே !
கட்டவிழ்த்து விட்டு விட்டான் கோனாரே—மாயக்
கண்ணன் வந்து மாடுகளைக்—கோனாரே !
வெட்ட வெளிப் புலனில் கோனாரே—மந்தை
மேய்க்கப் புறப்படுவோம் கோனாரே !
துள்ளியிளங் கன்றுவிளை யாடி வரவே—இன்பச்
சுதந்திரப் பாட்டொலிப்போம்—கோனாரே.

தெள்ளமுதஞ் சுரந்திடப் பசுக்களெல்லாம்—நன்றாய்ச்
செழிக்கச் செழிக்கப் பசுந் தீனி கொடுப்போம் !
கள்ளப் புலி நடுங்கக் கோனாரே—சுற்றுங்
கண்விழித்துக் காடதிரக் கொம்பொலிப்போம் '
குள்ளநரி மெள்ள வரும் கோனாரே—பறை
கொட்டிக் குடல்நடுங்கி ஓடிடச் செய்வோம்
இரண்டுகால் நரிவரும் கோனாரே—இனி
ஏமாந்து தூங்குவோமோ கோனாரே !
அரண்டவரைத் துரத்தும் பேய்களெல்லாம்—நாம்
அஞ்சாத வீரரென விளக்கிடுவோம்.

மாதம் மும் மாரிபெய்யும் கோனாரே—பசு
மடுக் குடம் பால் கறக்கும் கோனாரே '
மேதினியும் கோகுலமாம் கோனாரே—கண்ணன்
வீடுதோறும் விளையாடக் கண்டு களிப்போம்.
பொங்கலுக்குப் பொங்கல் வளம் பொங்கி வளரும்
புதுப் புதுச் செழிப்புகள் இன்பமளிக்கும்
மங்கள பொற் குழலூதும் கோனாரே—நாட்டில்
மாடு கன்றுக ளெல்லாம் சேம முறவே !

# இரண்டு சிமிழ்

(ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி.)

முன்னொரு காலத்திலே வியாபாரி ஒருவன் இருந்தான். அவனுக்கு வயதாகி மரணகாலம் கிட்டியபோது அவனுடைய மகன் மிகவும் இளங்குழந்தையா யிருந்தான். அவனுடைய சொத்துக்கள் பல இடங்களில் இருந்தன. அவன் இறந்து போனபிறகு அக்குழந்தையால் அவற்றையெல்லாம் மேல்பார்த்துவர முடியாது அல்லவா? ஆகையால் அவன் தன்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்றுப் பணமாக்கினான். பணமாக வைத்து விட்டுப் போனாலும் குழந்தைக்குப் போய்ச் சேராமல் செலவழிந்து போகக் கூடும் என்று நினைத்து, மிகவும் விலை உயர்ந்த மாணிக்கம் ஒன்றை வாங்கினான். அதை ஒரு சிமிழிலும் மணலை ஒரு சிமிழிலும் வைத்து, இரண்டு சிமிழ்களுக்கும் முத்திரையிட்டான். பிறகு தனக்கு மிகவும் நம்பிக்கையுள்ள சிநேகிதனாகிய பெரிய வர்த்தகன் ஒருவனை அழைத்து, தன்னுடைய அக்கம்பக்கத்துக்காரர்கள் ஐந்தாறு பேர்களையும் கூட வைத்துக்கொண்டு, அந்த இரண்டு சிமிழ்களையும் அவன் கையில் ஒப்புவித்து, "என் மகனுக்குப் பருவம் வந்தவுடனே இவ்விரண்டு சிமிழ்களையும் நீங்கள் அவனிடம் ஒப்புவித்து விடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான். அந்த வர்த்தகனும் 'அப்படியே கொடுத்து விடுகிறேன்' என்று அவற்றை வாங்கி வைத்துக் கொண்டான். சில நாள் கழித்து அந்தவியாபாரி இறந்துபோனான்.

சில வருஷம் கழித்துப் பையனுக்குப் பருவம் வந்ததும், அந்த வர்த்தகன் அவனை அழைப்பித்து, அவனுடைய தகப்பன் தன்னிடம் ஒப்புவித்திருந்த இரண்டு சிமிழ்களையும் பழைய சாக்ஷிகளின் முன்னிலையில் அந்தப் பையனிடம் கொடுத்தான். முத்திரைகள் ஒன்றும் பேர்ந்துபோகாமல் அப்படியே இருந்தன.

ஆனால், அந்தப் பையன் அவற்றை அந்தச் சாக்ஷிகள் முன்னிலையிலேயே திறந்து பார்த்தான். பார்த்தபோது, ஒரு சிமிழிலே மாணிக்கம் இருந்தது. அதன் அழகைக் கண்டு சந்தோஷம் அடைந்தான். மற்றொன்றைத் திறந்தபோது அதிலே வெறும் மணல் மட்டிலும் இருக்கக் கண்டு திகைத்துப் போனான். அதிலேயும் மற்றொரு மாணிக்கம் இருந்திருக்க வேண்டும், அதை எப்படியோ அந்த வர்த்தகன் திருடியிருக்க வேண்டும் என்று அவன் சந்தேகப் பட்டான்.

சந்தேகப்பட்டு, அந்த வர்த்தகனைப் பார்த்து "நீ இப்படி என்னை மோசம் செய்து விட்டாயே. ஒன்றிலுள்ள மாணிக்கத்தை எடுத்துக்கொண்டு மணலை வைத்திருக்கிறாயே." என்று சண்டை போட்டான். வர்த்தகனும் "நான் மோசம் செய்யவில்லை. உன் தகப்பன் கொடுத்ததை அப்படியே கொடுத்து விட்டேன். நீயே பார்த்தாயே. முத்திரைகள் எல்லாம் சரியாகத்தானே யிருந்தன" என்றான்.

பையன் அதை ஒப்புக்கொள்ளாமல் நியாயாதிபதியிடம் போய் முறையிட்டுக் கொண்டான். அவன் வர்த்தகனையும் சாக்ஷிகளையும் கூப்பிட்டு விசாரித்து, நடந்த சங்கதிகள் முழுவதையும் தெரிந்து கொண்டான். பிறகு, சற்றே யோசித்து, ஒரு தராசைக் கொண்டுவரச் சொன்னான். தராசு வந்ததும், அதன் தட்டு ஒன்றில் மாணிக்கத்தையும் அதை வைத்திருந்த சிமிழையும், மற்றொரு தட்டில் மணலுள்ள சிமிழையும் வைத்து நிறுத்தான். நிறுக்கவே இரண்டும் சம எடையாய் இருந்தன. அதைக் கண்டு நியாயாதிபதி வியாபாரியின் மகனைப் பார்த்து, "உன் தகப்பன் இந்த வர்த்தகன் மேல் நம்பிக்கை உள்ளவனா யிருந்தபடியால் அவனிடம் மாணிக்கத்தை ஒப்புவித்தான். ஆனாலும் அவனும் ஒரு வேளை தப்பித்தவறி உன்னை வஞ்சித்து விடுவானோ என்று பயந்து இந்த யுக்தி செய்தான். பெரிய, மிகவும் விலையுயர்ந்த, இந்த மாணிக்கத்தை எடுத்துக்கொண்டு, அதற்குப் பதிலாகச் சிறு மாணிக்கத்தை உன்னிடம் அவன் திரும்பக் கொடுக்காமல் இருக்கும்பொருட்டுச் செய்தயோசனை இது. இந்த மணலின் நிறையளவு உள்ளது மாணிக்கத்தின் நிறை என்று நீ தெரிந்துகொள்ளும் பொருட்டு, உன்னுடைய தகப்பனார் செய்த உபாயமே இது. வர்த்தகன் உன்னை வஞ்சிக்கவில்லை" என்று தீர்ப்புச் செய்தான்.

(பழங்கதையை ஒட்டி எழுதியது)

# எச்சில்

[ந. பிச்சமூர்த்தி]

இன்னிக்கு ஒரு பொசல். என் பேரில் எள்ளத்தனை பிசகுகூடக் கிடையாது. இருந்தாலும் நாட்டுப் பெண்ணோ இல்ல யோ? லோகத்திலே மழை பெய்யல்லேனு நாட்டுப் பொண், வெயில் கடுமைன்னு நாட்டுப் பொண், காத்துன்னு நாட்டுப் பொண். காச்சல்னு நாட்டுப் பொண் —ஸர்வமும் நாட்டுப் பொண்ணாலே!

இன்னிக்கி சமாராதனையா, காலம்பர நாலு மணிக்கு எழுந்திருந்தேன். சாணம் தெளிச்சது முதல்கொண்டு சமையல் வரையிலே செஞ்சிருக்கேன். அதுக் கென்ன நாத்தனாருந்தான் கூடக் கூட வந்தாள். நம்ம நிழல் வரல்லியோ! அப்படித்தான் வந்தாளே, ஒரு காரியம் உருப்படியாய்ச் செய்தாள்னு சொல்ல முடியுமோ? ஒண்ணுமில்லே ஒரு வாழைக் காயைச் சரியா கரிக்கி நறுக்கத் தெரியல்லே. சமையல்காரன் மாதிரி, ஒரு காயை ரெண்டா வெட்டி வச்சூட்டு, அருவாமணை தலையிலே கையை வச்சுக்கிண்டு அப்பறம் என்ன செய்யணும்னு சண்டைக் கோழி மாதிரி பார்த்துக்கிண்டு என்னைக் கேக்கரு. ஐய ஜன்மமே!

அதெல்லாம் போகட்டும்னு நாங்க சாப்பிடப்போ நடந்ததை நினைச்சுக்கிண்டா ஏழேழு ஜன்மத்துக்கும் போரும். இன்னிக்கி மூணுதரம் ஸ்நானம் பண்ணி இருக்கேன். உடம்பெல்லாம் அப்படியே குன்னிக் கிடக்கு. ஆனால் பிசகு நாத்தனார் பேரிலே இல்லியாம்! வெட்டிப்போடணும் போல இருக்கு!

பிராமணாள் முதல் பந்தி ஆச்சு. அப்புறம் வீட்டுப் புருஷாள் சாப்பாடு ஆச்சு. அவர், நாத்தனார் ஆம்படையான், அம்மங்கா ஆம்படையான், எல்லாருமா அஞ்சு பேர் சாப்பிட்டா. அவாள் எல்லாரும் எழுந்திருந்த பிறகு எங்கள் பந்தி. நாத்தனார் வாலை சுருட்டிக் கொண்டு இருக்கப் படாதோ? ரொம்ப செட்டும் கட்டுமாய் குடித்தனம் பண்றாளாம்! "எல்லாரும் ஆம்படையான் இலையிலேயே உக்காந்து சாப்பிட்டுடுங்கோ" இன்னாள். சாப்பிடறது பிசகுன்னு நான் சொல்ல வரல்லே.

நாத்தனார் பரிமாற ஆரம்பிச்சாள். அவாள் அவாள் இலையைப் பார்த்து உக்காருங்கோன்னு மொதல்லே உஷார் படுத்தினாள். ஒவ்வொத்தராய் உக்காந்தோம். எங்க அம்மங்காவைப் பாத்து "அந்த இலையில்லேடி. அடுத்த இலையிலே உக்காரு" இன்றாள்.

"அடுத்தது இல்லெ. இதுதான். அடுத்தது உன் தம்பி இலை" (அதாவது என் ஆம்படையான்) இன்னு மறுத்துச் சொன்னாள் அம்மங்கா. நான் கூட "ஆமாம் மன்னி, அம்மங்கா சொல்றது தான் சரி" இன்னேன்.

"இல்லேடி இல்லே" இன்னு அடிச்சுப் பேசினாள். நாங்க ரெண்டு பேரும் மறிச்சு மறிச்சு பேசிப் பார்த்தோம். நாத்தனார் பேசின ஜோரிலே எங்களுக்குக் கூட சந்தேகம் வந்துட்டுது. "ஆனால் தம்பியை கேட்டுடட்டுமா?" இன்னு கேட்டுப்பிட்டு வாசல்பக்கமாய்ப் போனாள். நாங்களும் ரேழி வரையிலே போனோம்.

எதித்த வீட்டுத் திண்ணையிலே களேபரமாய் உக்காந்து கொண்டு புருஷாள் எல்லாருமாய் சீட்டாடற மும்முரத்தில் இருந்தா. நாத்தனார் திரும்பி எங்களைப் பார்த்து, "அங்கே போய் கேட்டுக்கிண்டு வரட்டுமா?" இன்னாள். 'நல்ல வெட்கக்கேடு' இன்னாள் அம்மங்கா.

"அப்போ என்ன சொல்றே? நான் பார்த்தது பொய்யா—"

"இல்லே இல்லே, ஒரு வேளை தட்டுக்கிட்டுப் போயிடப் போறதே."

"தட்டுக் கிட்டுப் போர வயசு இன்னும் வரல்லே. வேணும்னு நான் பாதசரம்கூட போட்டுக்கலாம்... நான் தான் சொல்றேனே."

"பாப புண்யம் ஒங்களோடே" இன்னு அம்மங்கா சொல்லிப்பிட்டு அடுத்த இலையிலே சாப்பிட உக்காந்தா. நான் அம்மங்கா உக்காரப் போன இலையிலே உக்காந்தேன். வேறே வழி?

அப்பவே பிடிச்சு சாப்பிட்டாப் போலவே இல்லை. கண்ணுலே மணல்

விழுந்தாப்போலே என்னவோ மனசுலே உறுத்திக்கிண்டே இருந்தது.

சாயங்காலமா, அவர் காப்பி சாப்பிட உள்ளே வந்தார். பூனை குறுக்கே ஓடுறாப் போலே திடீருன்னு அம்மங்கா எங் கிருந்தோ வந்தா. அவரை பார்த்து "ஏண்டாப்பா, பூஜை அறை வாசலுக்கு நேரா உக்காந்து யார் சாப்பிட்டது?" இன்னாள்.

"ஏன்?" இன்னார் அவர்.

"சொல்லேன். அப்றம் சொல்றேன்."

அவர் தலையை சொறிஞ்சு கொண்டு "நான்தான்—இல்லே இல்லே—உன் ஆம்படையான்...இரு வந்துட்டேன்...நான் தான் போல இருக்கு" இன்னார்.

"நன்னா இருக்கு புருஷாள் யோக்யதை! கை இன்னது கால் இன்னது இன்னுகூடத் தெரியாதவாள்" இன்னு டோஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறப்போ அம்மங்கா ஆம்படையான் வந்துட்டார்.

"என்ன உபன்யாசம் நடக்கிறது," இன்னு காதை வளேச்சுக்கிண்டார்.

புருஷாள் எல்லாம் கொல்லுன்னு சிரிச் சுப்பிட்டா. அம்மங்கா ஆம்படையானே பார்த்து, "இன்னிக்கி நீ எங்கே உக்காந்து சாப்பிட்டே?" இன்னு அவர் கேட்டார்.

"ஏன், யார் இலையிலேயாவது இவள் உக்காந்து சாப்பிட்டுட்டாளா?"

புருஷாள் சிரிப்பு. எனக்கு பிராணனே போயிட்டுது.

"ஏதோ குளறுபடி ஆகி இருக்காப்போலே இருக்கு. நீ சொன்னாத்தான் புரியும்."

"பூஜை அறைவாசலுக்கு எதிர்த்தாப் போலே நீ உட்கார்ந்துஇருந்தே. அடுத்த இலையிலே நான்."

அவ்வளவு தான். அம்மங்கா அந்த எடத்திலே நிக்கல்லே. எனக்கு வயத்தை வயத்தை கொமட்டித்து. இப்பகூட அப்படித்தான் இருக்கு. இதுக்கு பிராயச்சித்தம் உண்டான்னு கேக்க அம்மங்கா போயிருக்காளாம். எனக்கு இப்போ முழுகினதோடே மூணுதரம் ஸ்னானம் ஆச்சு. என்ன வேண்டி இருக்கு! மனசுக்கு சமாதானம் வரல்லே. நல்ல நாத்தனார்! நல்ல வழக்கம்!


# அது ஒரு பலமான கோட்டை

65,000 எண்ணிக்கைக்கு அதிகமாகவேயுள்ள தனது பாலிஸிஹோல்டர்களுக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகவே புரிந்துவந்திருக்கும் உண்மையான சேவை என்னும் அசையாத கற்கோட்டையில் தன் கீர்த்தியை நாட்டியிருக்கும் 'நாஷனல்' உறுதியில் நிகரற்றது.

பாலிஸிதாரர்களுக்குத் தாராளமாய்ச் சலுகை காட்டுவதிலும், உரிமைகளை உடனுக்குடனே தீர்த்து வைப்பதிலும் இது மிகப் பிரசித்திபெற்ற ஸ்தாபனம். வியாபாரமந்தம் போன்ற பல ஆபத்துக் காலங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இதனுடைய பாலிஸி உண்மையிலேயே நல்ல மூலதனம்.

**நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

(தலைமை ஆபீஸ்: கல்கத்தா)

**நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,**

**எஸ்பிளநேட், மதராஸ்.**

# கலையும் ஒழுக்கமும்*

(வ. ரா.)

பாதுஷா அவுரங்கசீப், டில்லியில் தமது அரண்மனை உப்பரிகையில் நின்று கொண்டிருந்தார். பாதுஷாவின் பக்கத்தில் வஸீர் அதாவது பிரதம மந்திரி. கீழே ராஜவீதியில், ஏராளமான ஜனத்திரள். "எதற்காக கூட்டம்?" என்று பாதுஷா வஸீரைக் கேட்டார். "சங்கீத ரஸிகர்கள் யாவரும் சங்கீதத்துக்குப் பாடைகட்டித் தூக்கிக் கொண்டு போய், அதைக் குழியில் புதைக்கப் போகிறார்கள்" என்று வஸீர் பதில் சொன்னார். "ஆகா! அப்படியானால், அவர்களை ஆழமாகக் குழியை வெட்டி, அதில் சங்கீதத்தைப் புதைக்கச் சொல்லுங்கள். புதைக்கப்பட்ட சங்கீதம் வெளியே வராமல்படிக்கு, குழி ஆழமாக இருக்கட்டும்" என்று பாதுஷா அழுத்தமாகச் சொன்னார்.

குர்ஆனை ஏடுகளில் எழுதி, அதைவிற்று, தமது தினசரி வாழ்க்கையை நடத்தி வந்த தவசியைப்போன்ற பாதுஷா அவரங்கசீப் அவர்களுக்கு, சங்கீதத்தின் பேரில் ஏன் கோபம் உண்டாக வேண்டும்? சங்கீதத்தினாலே தவமும் ஒழுக்கமும் கெட்டுவிடும் என்பது அவருடைய கருத்தா?

பெரிய இடத்துக் கதைக்குப் போக வேண்டியதில்லை. நான் சிறு பிள்ளையாக இருந்தபொழுது, எனக்கு நாடகத்தில் மிகவும் பிரியம். எப்பொழுதும் நாடகக்காரர்களின் கூட்டத்திலேயே இருப்பதற்கு எனக்கு ஆசை. ஆனால் என் உறவினர்களுக்கு அது பிடிப்பதில்லை. "நாடகக்காரர்களோடு சேராதே! சேர்ந்தால், வீணாகக் கெட்டுப் போய்விடுவாய். நல்லது ஒன்றும் உனக்குப் படியாது. வேண்டாம். அவர்களோடு சேராதே" என்று அவர்கள் எனக்கு எச்சரிக்கை செய்தவண்ணமாக இருந்தார்கள். இவர்கள் ஏன் இவ்வாறு எச்சரிக்கை செய்ய வேண்டும்? பாதுஷாவுக்கு சங்கீதக் கலை பிடிக்கவில்லை. என் உறவினர்களுக்கு நாடகக்கலை பிடிக்கவில்லை.

புராணங்களிலே, வேடிக்கை ஒன்றைக் காணலாம். ஊசி முனையில் நின்று தவம் செய்த முனிவர்களின் கதைகளைக் கேட்டிருப்பீர்கள். உக்கிரமான தவம் செய்யும் முனிவர்களின் தவத்தைக் கெடுக்க, தேவேந்திரன், நடனப் பெண்களை அனுப்புவதுண்டு என்று நம்மவர்கள் படித்தும் கேட்டும் இருப்பார்கள். விசுவாமித்திரன் கடுந்தவம் புரிந்த சமயத்தில், தேவராஜன், தேவதாசியான மேனகையை பூலோகத்துக்கு அனுப்பி, விசுவாமித்திரன் செய்துவந்த தவத்தைக்கெடுக்க முயற்சி செய்தான் என்று நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். இன்னொன்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். தவத்திலே ஆழ்ந்து கிடந்த பரமசிவன், சித்தம் திரும்பி, தன்னைக் கவனிக்கமாட்டாரோ என்று அஞ்சி, பார்வதி தேவியார் பரமசிவனுக்கு முன்னே நர்த்தனம் செய்து, அவருடைய தவத்தைக் கலைத்ததாகவும் கதை உண்டு. நர்த்தனக் கலைக்கும் தவத்துக்கும் விரோதமா?

"பொதுவாகப் பார்த்தால், கலைகள் யாவுமே, மனிதர்களின் நல்லொழுக்கத்தை வேரோடு கல்லி, அவர்களைக் கெடுத்துவிடுகின்றன" என்று ஒருவித எண்ணம் இருந்து வருகிறது. சங்கீதம், சித்திரம், சிற்பம், நாடகம், பொதுவாக இலக்கியம் முதலியவைகளால், உலகம் அதாவது மனிதவர்க்கம் கீழ் நோக்கிச் செல்லுகின்றதேயல்லாமல், மேல் நோக்கிச் செல்லவில்லை என்று பிடிவாதமாகப் பலர் எண்ணி வருகிறார்கள்.

ஆனால் கலாரஸிகர்களோ, வேறுவிதமாக அபிப்பிராயப் படுகிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிப்போம். "மொட்டு மலர்வதைப்போலவும், செடி மரமாக வளர்வதைப் போலவும், இளந்தளிர் இலையாக மாறுவதைப் போலவும், காய் கனியாகமாறி ருசிப்பதைப் போலவும், தென்றல் காற்றினால் ஒருவித அலுப்புத்தீர்வும் உற்சாகமும் ஏற்படுவதைப் போலவும் கலை என்பது மனித வளர்ச்சியைக் காண்பிக்கிறது. கலை என்பதே இயற்கை வளர்ச்சியாகும். இயற்கை வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கும் கலைகளை மறந்து, ஒழுக்கம் ஒழுக்கம் என்று பித்தலாட்டம் செய்தால், அதனால் ஒழுக்கம் விருத்தியடைவதில்லை. அதனால் சூதும் வஞ்சமும் ஏமாற்றும் தான் அதிகரிக்கின்றன. ஒழுக்கம் என்பதும் தவம் என்பதும் இயற்கை விதிக்குப் பொருத்தமில்லாத ஒருவித ஹடயோக மார்க்கம்; அதனால் பொய்யும் பாசாங்கும் விருத்தியடையுமேயல்லாமல், மனிதனுக்கு இயல்பாகக் கிடைக்கவேண்டிய இன்பமே கிடைக்காது. உயர்ந்த லட்சியத்தை வாயால் பேசி, வாழ்க்கையில் தடுமாற்ற மடைந்து,

* ரேடியோ பிரசங்கம்.

சீர்குலைந்துபோன புத்த சமயத்தைப் பாருங்கள். ஜீவகாருண்யம் என்பது அந்த மதத்தின் அடிப்படையான கொள்கை. அந்தக் கொள்கையைக் கொண்டவர்கள் மாமிசம் சாப்பிடலாமா? ஆனால் நடைமுதலில், நாம் என்ன பார்க்கிறோம்? பௌத்தர்களில் பெரும்பாலோர் மாமிசம் உண்ணுகிறார்கள். ஆகவே இயற்கைக்குச் சிறிதும் பொருந்தாத சில கட்டுப்பாடுகளை உண்டாக்கிக் கொண்டு, ஒழுக்கம் ஒழுக்கம் என்று பேசி, முடிவில் வெறும் வேஷதாரிகளாக ஆகலாமா" என்று கலாரஸிகர்கள் சொல்லுகிறார்கள்.

கலாரஸிகர்கள் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது. ஒழுக்கத்தை வற்புறுத்திப் பேசும் உத்தமர்களின் பேச்சிலும் உண்மை இருக்கிறது. ஆனால் ஒழுக்கமும் கலையும் பரஸ்பரம் விரோதமானவை என்ற எண்ணமும் பிடிவாதமாக உலகில் இருந்து வருகிறது. ஆகவே, கலாரஸிகர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொண்டு, ஒழுக்கத்தை அவசியம் செய்துவிடுவதா? அல்லது ஒழுக்கம் தான் உயர்ந்தது என்று கொண்டு, கலையைத் தள்ளிவிடுவதா? இந்த தர்ம சங்கட நிலையில், எனக்கு ஒரு சிறு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

இரண்டு பேரும் உத்தேசம் பதினாறு வயதுள்ள மாதுகள். ரூபலாவண்யத்தில் இருவரும் ரதியைப்போன்றவர்கள். பேச்சிலும் வினயத்திலும் ஸரஸ்வதியைப் போன்றவர்கள். எந்த வகையிலும், ஒருவர் மற்றவருக்குச் சளைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இருவருக்குள்ளும் வாக்குவாதம். ஒருவள் சொல்லுகிறாள், "நான்தான் அழகி; நான்தான் சரஸி; நான்தான் சிங்காரி; நான்தான் வாக்விலாஸினி" என்று. மற்றவளோ, இதே பாடத்தை முழக்கமாகத் திருப்பிப் படித்துவிட்டாள். பஞ்சாயத்து இல்லாமல் தீர்ப்பு அகப்படுமோ? அவர்கள் இருவரும் ஒரு பெரியவரிடம் சென்று, தங்கள் கட்சி வாதத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். பெரியவர் இரண்டு கட்டழகிகளையும் ஒவ்வொருவராகச் சிறிது நேரம் கவனித்துப் பார்த்தார். கடைசியாக பெருமூச்சுவிட்டுக் கொண்டு, "ஒருத்தரைப் பார்த்தால், அவர் மற்றவரைக் காட்டிலும் எல்லா வகையிலும் உயர்ந்தவர்" என்று தோன்றுகிறது என்று பதில் சொன்னார். இது தர்ம சங்கடமான நிலைமையைச் சமாளித்துக் கொள்வதற்காக சாமர்த்தியமாக சொன்ன பதில் அல்ல. இது உண்மையான பதில்தான்.

ஆகவே, கலைக்கும் ஒழுக்கத்துக்கும் இடையே ஆதாரமில்லாமல் ஏற்பட்டிருக்கும் விரோதத்துக்குக் காரணம் என்ன? கலையும் ஒழுக்கமும்—இரண்டும் மனிதவர்க்கத்துக்கு அவசியமானவை என்ற முடிவுக்கு வருவோமானால், அவைகள் இரண்டையும் எப்படி இசைத்துப் பொருத்துவது? விஷத்தையும் மருந்தாக உபயோகப்படுத்தலாம் என்று சொல்லுகிறார்கள். இது உண்மைதான். விஷத்தையே மருந்தாக உபயோகப் படுத்தும் சக்தி மனிதனுக்கு இருக்குமாகில், கலையையும் ஒழுக்கத்தையும் விரோதத்தைத் தீர்த்து ஒன்றுபடுத்த முடியாதா?

எந்த விஷயத்தையும்பற்றி யோசித்து பகுத்தறிவை உபயோகப்படுத்தினால், அதற்கு பரிகாரத்தைத் தேடிக்கொள்ள முடியும். யோசிக்காமலே மூதாதைகளின் வழி என்று சொல்லிவிட்டால், மனிதனுடைய அறிவு துருப்பிடித்துப்போகும் என்று நிச்சயமாகச் சாபம் கொடுத்துவிடலாம்.

---

# தினமணி வருஷ மலர்

இந்த வருஷத்து தினமணி வருஷ மலர் உண்மையிலேயே ஒரு இலக்கிய விருந்து என்றே சொல்லவேண்டும்.

பலதரமான எழுத்தாளர்கள் பல விஷயங்களைப்பற்றி மிகவும் ரஸமாக எழுதி இருக்கிறார்கள். ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரி, தி. நா. சுப்ரமணியம் முதலியவர்கள் சரித்திர சம்மந்தமாக எழுதியிருக்கிறார்கள். ச. து. சுப்ரமணிய யோகி, தேசிக விநாயகம் பிள்ளை கொத்தமங்கலம் சுப்பிரமணியம், பிக்ஷு முதலியவர்கள் கவிதைகள் எழுதியிருக்கிறார்கள்.

டாக்டர் சாமிநாத அய்யர் தன் சொந்த பாணியில் இலக்கிய ஆராய்ச்சிக் கதையைச் சொல்லுகிறார்.

சிதம்பர சுப்ரமணியம், க. நா. சுப்பிரமணியம், ந. பிச்சமூர்த்தி கு. ப. ராஜகோபாலன் முதலியவர்கள் கதைகள் எழுதியிருக்கிறார்கள்.

நல்ல படங்களுடன் மலர் மிகவும் நேர்த்தியாக இருக்கிறது.

# விருந்து வேண்டாம்

[" ரஸிகன் "]

நேற்றுக் காலையில் என் சிநேகிதர் கிருஷ்ணய்யர் எங்கள் அகத்துக்கு வந்தார். அவருக்கு ஸர்க்கார் உத்தியோகம். நல்ல சம்பளம். மனுஷ்யன் சுகி. ஆனால் நல்ல சுபாவம். பேசிக்கொண்டிருக்கையில், "திருவண்ணாமலையில் கிருத்திகை தீபம் பார்த்ததே யில்லை. ரொம்ப விசேஷமா யிருக்குமென்கிறார்கள். இந்த வருஷம் போகலாமென்று நினைக்கிறேன். வருகிறீரா?" என்று கேட்டேன். அதற்கவர், "அதுக் கென்ன, போகலாமே. 'காஷுவல்' லீவு ஏறக்குறைய பாக்கி கிடக்கு. இரண்டு நாள் எடுத்தாப் போச்சு. அங்கே, என்ன, ஹோட்டல் வசதி யிருக்குமோ இல்லையோ?" என்றார்.

"ஹோட்டல் சரிப்படாது. உத்ஸவ காலத்தில் கூட்ட நெரிசலில் ரொம்ப ஆபாஸமா யிருக்கும். தவிர, ஸ்வாமி தரிசனத்துக்குப் போர நாம் அந்த எச்சிலும் அநாசாரமும் வீணாய்ச்சுமப்பானேன்? நமக்குத் தங்குவதற்கு நல்ல சௌகரியமிருக்கிறது. அந்த ஊரில் அருணாசலய்யர் என்றொருவர் வக்கீலாய் இருக்கிறார். அவர் என்னுடன் காலேஜில் படித்தவர். வெகு நாளாக என்னை உத்ஸவத்துக்கு வரணும் என்று நிர்ப்பந்திக்கிறார். அங்கே போனால் நமக்கு ஆசார உபசாரமாய் நடக்கும்" என்றேன்.

அதற்குக் கிருஷ்ணய்யர் "அப்பப்பா, அது வேண்டாம். வெளியூர் போனால் அந்நியர் வீட்டில் அதிதியாய்த் தங்குவதில்லை என்று கொஞ்ச நாளாய்ப் பிரதிக்ஞை பண்ணியிருக்கிறேன். சரி, திருவண்ணாமலைக்கு உத்ஸவமெல்லாம் ஆனபிறகு ஒரு சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமை போய் வரலாம். உத்ஸவ காலத்தில் ஆலய தரிசனமே மட்ட மென்பது என் அபிப்பிராயம்" என்று ஊர்ஜிதமாகச் சொன்னார்.

"நன்றாயிருக்கு நீர் சொல்வது. நல்ல வேளையாய் உம்ம மதத்தை லோகம் அனுஷ்டிக்கவில்லை. அதனால்தான் கோவில் குளம் ஏதோ நடந்துவரது. அது போகட்டும், பிறர் வீட்டுக்கு ஒரு நாள் அரை நாள் கூட விருந்து போகப்படா தென்று உமக்கென்ன வைராக்கியம்?"

"அதுவா, சொல்லுகிறேன், கேளும். ஐந்தாறு வருஷத்துக்கு முன் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு சோழ பாண்டிய நாட்டு க்ஷேத்திரங்கள் சென்று வரலாமென்று கிளம்பினேன். க்ஷேத்திராடனம் என்பது ஒரு வியாஜ மென்றே நீர்வைத்துக் கொள்ளலாம். அதிலிருந்து எனக்கு தெய்வ நம்பிக்கையில்லையென்று நினைத்துவிடாதேயும். அந்த நம்பிக்கையை வளர்க்க ஆலயங்கள் எனக்கு அவசியமாயில்லை. அவ்வளவுதான். இருந்தாலும், ஆயிரக்கணக்கான வருஷங்களாய்க் கோடிக் கணக்கான ஆத்மாக்கள் அவ்வாலயங்களில் கடவுளை வழிபட்டு மன அமைதி அடைந்திருப்பதால், அக் கோயில்களில் அந்த பக்தி மிகுதியாலேயே ஒரு சாந்நித்தியம் ஏற்பட்டிருக்க வேணும். அதை வேறு கவலையின்றி சாவதானமாக அனுபவிக்க வேணுமென்று தான் கூட்டம் கும்பல் ஏற்படாத நாளாய்ப் பார்த்துக் கிளம்பினது. முதலில், இந்தத் திருவண்ணாமலைக்கே போனேன். அப்போ ரமண மஹர்ஷியைத் தரிசிப்பது என்ற விதியை வெள்ளைக்காரர்களும், நம் நாட்டுத் தலைவரும் அவ்வளவு பெருமையாகச் செய்தாகவில்லை. ஆகையால் என்போன்ற வழிப்போக்கர் அங்கே அதிகமாய் வரமாட்டார்கள் என்ற தைரியத்தால் அந்த மகானைச் சாவகாசமாய்ப் பார்க்கலாம் என்ற எண்ணம் கொண்டே நான் முதலில் திருவண்ணாமலை சென்றது.

"அங்கே ஒரு சிநேகிதர் வீட்டில் தங்கினேன். ரமணாசிரமத்தைப் பற்றியும் பெரிய கோயிலைப் பற்றியும், அவர் யோகக்ஷேமத்தைப் பற்றியும் பேசிவிட்டு, ஸ்நானம் செய்து சாப்பிட உட்கார்ந்தோம். அவர் மனைவி எடுத்ததும் அன்னத்தைக் கொண்டு வந்து இலையில் வைத்தாள். அவர்கள் வைஷ்ணவர்கள் என்பது அப்பொழுதுதான் என் ஞாபகத்துக்கு வந்தது. அன்னத்தைப் பிசைந்து கொண்டிருக்கும்போது பொரித்த கூட்டை சுமார் அரைப்படி இலையில் வார்த்தாள். திடுக்கிட்டேன். எனக்குப் பொரித்த கூட்டு, பொரித்த குழம்பு என்ற வகைராவே கிட்டவரப்படாது. மேலும், அவ்வளவு பொரித்த கூட்டு ஒரு மூச்சில் சாப்பிடக் கூடிய திண்டன் யாரையும் நான் கண்டதில்லை. 'போகட்டும், எரிந்துவிடுவோம்' என்று மனதுக்குள் தீர்மானம் பண்ணிக் கொண்டு கூட்டை ஒருபுறம் ஒதுக்கினேன். ஆனால் மேற்படி வியஞ்சனம் ஒன்றையும்

காணேம். என் சிநேகிதர் இலையை நோக்கி னேன். அவர் சாதத்தையும் கூட்டையும் கலந்து கலந்து விளாங்காயளவு உண்டையா யுருட்டி வாய்க்குள் கவுண்டிக்கல் வீசுவது போல் வீசிக்கொண்டிருந்தார். அப்பொழுது தான் விஷயம் வெளிப்பட்டது. இவர்கள் வைஷ்ணவத்திலும் பிராசீன வைஷ்ணவம் போலிருக்கிறது. ஸ்மார்த்த சம்பிரதாய மான ஸாம்பார் இன்னும் இவர்கள் அகத்தில் எட்டிப் பார்க்கவில்லை."

நானே ஸாம்பாரில் பிறந்து வளர்ந்தவன். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கூட்டில் இருக்கும் காய்கறிகளைப் பிழிந்து எடுத்துவைத்து விட்டு, அதன் ரசத்தைமட்டும் சேர்த்துக் கொண்டு அன்னத்தை ஒருவாறு உள்ளே செலுத்தலாமென்றாலோ, அதில் திரவபதார்த்தமே கிடையாது. போகட்டும், நமக்குப் பிடித்த சாமான்களாவது அந்தக் கதம்பத்தில் தென்படுமோ என்று பார்த்தால், மொச்சக்கொட்டை, பலாக்கொட்டை முத லான கொட்டை விசேஷங்களே அதில் மிகுதி யாகக் காணப்பட்டன. இந்திரிய நிக்ரகம் செய் யும் ரிஷிகள் புசித்ததாய்ச் சொல்லப்படும் அக்கொட்டைகளை நான் அவமதிப்பாய்ச் சொல்லவில்லை. கேவலம் பாமரனான எனக்கு அவை தொண்டைக்குக் கீழ் இறங்குவ தில்லையே, நான் என்ன செய்யலாம்! இந்த சங்கடத்தில் என் சிநேகிதர், 'என்ன ஆகாரம் பண்ணவில்லையே, உடம்பு சரிப்படவில் லையா?' என்று பரிவுடன் கேட்டார். அதைக் கேட்டதும் ஒரு யுக்தி தோணிற்று. 'இல்லே, கொஞ்சநாளாய் மருந்து சாப்பிடரேன்' மொச்சைக்கொட்டை முதலானது தள்ளுபடி, என்று இழுத்தேன். 'அடடா, அப்பொவே சொல்லியிருக்கப்படாதா, ஸாம்பார் வைக்கச் சொல்லி யிருப்பேனே (ஆகையால் ஸாம் பாரைப்பற்றி இவர்களும் கேள்விப்பட் டிருக்காப்போலிருக்கு) சரி, சாத்தமது கொண்டு வா' என்று தன் ஸம்ஸாரம் காதில் படும்படி சொன்னர். ஆவலோடு சாதத்தைச் சேர்த்துக் கொண்டேன். அந்தம்மை இலையில் ரஸத்தை வார்த்தாள். அது கொட்டு ரஸம். கொத்துக் கொத்தாய் வேகாத பருப்பும், மிளகாயும்தான் மிகுதியாகக் காணப்பட்டது. அவர்கள் கவனிக்காத சமயம் பார்த்து இதுகளைக் கூட்டில் தள்ளிவிட்டு கொஞ்சம் ரசமன்னம் சாப்பிட்டு மோரைப் போட்டுக் கொண்டு, செத்தேன் பிழைத்தேன் என்று இலையைவிட்டு எழுந்தேன். இரண்டாவது வேளை அங்கே தங்குவது ஆபத்து என்று, ரமணாசிரமம்கூடச் செல்லாமல் மத்தியானமே ரயிலேறிவிட்டேன்.


# என். பாணமூர்த்தி,

பிரபல நகை வியாபாரி,

நெ. 77, கச்சேரி ரோடு, மைலாப்பூர்,

சென்னை.

வெள்ளி, தங்க நகைகள் செய்வதில் பிரசித்திப் பெற்ற வர்கள். வேலைப்பாடுகள் உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிக்கும். வைரங்கள் கட்டுவதில் தேர்ந்தவர்கள். ஒருமுறை எங்கள் கடைக்கு விஜயம் செய்து பாருங்கள்.

**இந்தியர் ஸ்தாபனம், இந்தியர் வேலைப்பாடு, இந்தியர் முதல்.**

# கற்பனை வீடு

(எஸ். எஸ். ராமசாமி, பி. எஸ். ஸி., பி. எல்.)

நாம் வாழ்நாளைக் கழிக்கும் வீட்டைச் சுற்றிலும் காணப்படும் இரண்டு விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பது அவசியமாகும். அடர்ந்த காட்டையும், 'ஜிலு ஜிலு' வென்று ஓடும் நீரோடையையும் பற்றித்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

உலகத்திலே இயற்கையாகத் தோன்றிய பெரிய கற்பாறைகள், அடர்ந்த செடிகள், புதர்கள் முதலியவற்றை வைத்துக் கொண்டே நம் மனத்திற்கு உகந்த இடமாக அமைத்துக் கொள்ளலாம். சமீபத்திலிருக்கும் சிறிய குன்றுனது தூரத்திலே காணப்படும் பெரிய மலைத் தொடரைக் காட்டிலும் நம் மனத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணுகின்றது; நம்மைச் சுற்றிலுமுள்ள அடர்ந்த குத்துச் செடிகளும், மரங்களும் ஒரு காட்டின் மத்தியில் இருப்பது போன்ற உணர்ச்சியை ஊட்டுகின்றன. அங்கங்கே உட்காருவதற்காக மணல் மேடுகள் காணப்பட்டாலும் நல்லது தான்.

நதிக்கு அருகிலாவது அல்லது கடலுக்குச் சமீபத்திலாவது நமது வீட்டைக் கட்டவேண்டும். நதிகளின் பாட்டைக் கேட்டு நம் மனத்திலும் கவிதை உணர்ச்சி பிறக்கிறது. தண்ணீர்ச் சுனைகளும், சிற்றருவிகளும், செழித்து வளர்ந்த செடி கொடிகளும், 'நெஞ்சிற் கனல் மணக்கும்' பூக்களும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன.

இவ்வாறு சுகவாஸத்திற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்த பின்பு, இன்னொரு விஷயத்தைப் பற்றிக் கவனிப்போம். வீட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டத்தைச் சிறிது சீர்படுத்த வேண்டும். தோட்டத்தைப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். நடு நடுவே கண்ணிற்குக் குளிர்ச்சி தரும் புல் திட்டுகளை அமைக்க வேண்டும். நல்ல கனிதரும் மரங்களையும், சண்பகம், இருவாட்சி, மல்லிகை, ரோஜா தங்கரளி முதலிய புஷ்பச் செடிகளையும் வளர்க்க வேண்டும். இவை பார்ப்பதற்கு வசீகரம் பொருந்தியதா யிருக்கும். இன்னும் மூலைகளிலும் ஒதுங்கிய இடங்களிலும் தாமாகவே வளரும் காட்டுப் புஷ்பங்களை வெட்டி எறியாது வளரவிட வேண்டும். தோட்டக்காரன் ஓரளவு சோம்பேறியாக இருந்தாலும் பரவாயில்லை. வளர்ப்பதற்காக அமைந்த புஷ்பச் செடிகளை மாத்திரம் அவன் கவனிக்க வேண்டும். மற்றக் காட்டுப்பூச்செடிகளை அவன் கத்தரித்துச் சீர்திருத்தி அலங்கோலப் படுத்தலாகாது. நீரோடையின் கரையில் மிக்க சுவையையுடைய கனிகள் தரும் மாமரங்கள், கொய்யா, பலா முதலிய மரங்களையும் வளர்க்க வேண்டும்.

தோட்டத்தில் பறந்து திரிந்து பாடும் பட்சிகளையும், குயிலையும், மைனு, குருவிகளையும் பிடித்துத் தொந்தரவு பண்ணக் கூடாது. அவற்றின் இன்னிசை தோட்டத்திற்கே உயிரளிக்கும். பட்சிகள் இல்லாவிட்டால் அது பாலைவனமாகத் தன். தோன்றும். ஆனுல் வானம்பாடிக் குருவியையும், கிளியையும் சிறைப்படுத்தலாம் அவற்றின் இன்னிசையைச் சாப்பிடும் பொழுதும் காலைத் துயிலெழும் பொழுதும், மனஞ்சலிக்காது கேட்டு ஆனந்திக்கலாம். இப்பறவைகளை மாத்திரம் நான் பிடித்துக் கூண்டிலடைத்து வைத்திருக்கிறேன்.

வீட்டை உயர்ந்த குன்றின்மேல் கட்ட வேண்டிய அவசியமில்லை. மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கி நிற்காதபடி கூடிய வரைக்கும் மேடான இடத்தில் கட்ட வேண்டும். சூரிய வெளிச்சம் உள்ளே தாராளமாகப் புகும்படி கிழக்குப் பார்த்த வாசல் விடலாம். சூரியோதயத்தின் காட்சியைக் கண்டு மகிழலாம். சூரியாஸ்த மனத்தின் அற்புதங்களைப் பக்கத்திலுள்ள குன்றின்மேலேறிக் கண்டு களிப்படையலாம்.

ஓரடுக்கு மெத்தையையுடைய வீடே வசிப்பதற்குச் சௌகரியமா யிருக்கும். பல அடுக்கு மெத்தைகளையுடைய வீடானது போர்வீரர்கள் தங்கும் படை வீட்டைப் போல் தோன்றும். ஆனுல் பல அறைகளை உடையதாயிருக்க வேண்டும்.

அறைகள் உயரமாயும், விசாலமானவை யும், வெளிச்ச முள்ளவையாயும் இருக்க வேண்டும்.

சிநேகிதர்கள் வந்தால் அவர்களை வர வேற்று உபசரிப்பதற்காக அமைந்த விசாலமான அறையில் நாலா பக்கங்களி லும் சுவர்களைச் சுற்றிலும் சோபாக்களைப் போட வேண்டும். சோபாக்கள் மெத்தை வைத்துத் தைத்தவையா யிருக்க வேண்டும்.

சாப்பாட்டு அறையில் அநாவசியமாகத் தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு நிரப்பி விடலாகாது.

வாசிக்கவும், எழுதவும் புருஷர் களுக்குத் தனி அறை வேண்டும். அதைப் போலவே, படிக்கவும், தையல் வேலை செய்யவும் பெண்களுக்கும் தனி அறை இருக்க வேண்டும். பெண்களுக் குரிய அறையைப்பற்றி விஸ்தரிப்பதை அவர்களிடமே விட்டு விடுகிறேன். அவர் கள் வழிக்குப் போகத் தயங்கத்தான் வேண்டி யிருக்கிறது!

புருஷர்களுக்காக ஏற்பட்ட அறை யைப் பற்றி இங்கு இரண்டொரு வார்த் தைகள் சொல்ல விரும்புகிறேன். சுவ ரைச் சுற்றிலும் மூன்றடி உயரத்திற்கு அலமாரிகள் அமைக்க வேண்டும். அவற் றின் உச்சிபாகம் ஏற்றத் தாழ்வின்றி ஒன் றோடொன்று நெருங்கித் தொடர்ச்சியான ஒரே தட்டாக அமைய வேண்டும். இந்த அலமாரிகளில் ஷேக்ஸ்பியர், கம்பன், இளங்கோ, டென்னிஸன், மாலியர், பைரன், பாரதியார் முதலிய ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். இந்த விசாலமான அறையில் ஐந்துமேஜைகளைப் போடலாம். ஒன்று படிப்பதற்காகவும், இன்னொன்று அவ்வப்போது கலந்துகொள்ள வேண்டிய புத்தகங்களை வைப்பதற்காகவும், மற் றொன்று கையெழுத்துப் பிரதிகளை வைப் பதற்காகவும் ஒதுக்கப் படவேண்டும். ஒரு மேஜையின் மேல் தேசப்படங்களைச் சுருட்டி வைக்கலாம். மலைப் பிரதேசங் களையும், சம வெளிகளையும் நதிகள் உற் பத்தியாகும் இடங்களையும் தேசப் படத் தில் பார்க்குந் தோறும் நமக்கு உற்சாக மாகவே யிருக்கும். இதெல்லாம் தவிர முக்கியமாக ஜப்பானியர் பிடிக்கும் அல் லது தோல்வி யடைந்து விட்டுக்கொடுக் கும் சீனப் பிரதேசங்களை மனதில் பதிய வைத்துக் கொள்ளச் சிறந்த கருவியாகும். ஹிட்லர் வெற்றிக் கோலத்தோடு புகுந்து செல்லும் 'செக்' பிரதேசத்தையும் நம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கோடு கிழித்துக் காட்டிவிடலாம். அவர்களுக்கு லகுவான முறையில் சரித்திரத்தைக் கற்று கொடுப்பதற்கும் இதுவே மேலான முறை யாகும். ஐந்தாவது மேஜையை வேளா வேளைகளில் உபயோகப் படுத்திக்கொள்ள பிரத்தியேகமாகப் போட வேண்டும்.

படிப்பதற்கும் எழுதுவதற்கும் உப யோகப்படுத்தும் நாற்காலி தணிந்த சாய் மான நாற்காலியாய் இருக்க வேண்டும். அதன் பக்கத்திலேயே—இடைஞ்சலாகத் தோன்ற விட்டால்—வானம் பாடிக் கூண் டையும், கிளிக் கூண்டையும் தொங்க விடலாம்.

மேல் மாடியிலேயே, தாராளமாகக் காற்றும், வெளிச்சமும் வரும் ஒரு அறை யைத் தேகாப்பியாசம் செய்வதற் கென்று உபயோகப் படுத்திக் கொள்ளலாம். அதை யொட்டியே ஸ்நான அறை இருப்பது உசித மாகும்.

பொழுது போக்காக நேரங் கழிப்ப தற்கு ஒரு அறையை ஏற்படுத்த வேண் டும். அங்கே 'கேரம்' 'டேபிள் டென் னிஸ்' முதலிய விளையாட்டுக்கள் விளை யாடவும், மரப் பூ வேலை செய்யவும் வசதி கள் உண்டாக்க வேண்டும். இங்கே ரவி வர்மா, வங்காளச் சித்திரக்காரர்கள் எழுதிய சித்திரங்களையும், புகைப் படங் களையும் ஆணி அடித்துத் தொங்க விட லாம்.

நித்திரை செய்வதற் கென்று அமைந்த அறையைப்பற்றி முடிவில் கவனிப்போம். இந்த அறையானது காற்றோட்ட முள்ள தாக இருக்கவேண்டும். தரை 'வார்னிஷ்' பூசிய பலகையினால் அமைந் திருக்கலாம். அங்கங்கே கட்டில்கள் மாத்திரம் போட வேண்டும். அதிகச் சாமான்களைப் போட்டு ஒட்டடை அடையச் செய்து விடக்கூடாது. தூக்கம் வராவிட்டால் படிப்பதற்கென்று ஒரு சிறிய கண்ணாடி அலமாறியில் சில புத்தகங்களை அடுக்கி வைக்கலாம்.

# மாமூது

"வஸந்தன்"

"ஆமாம்! ஆத்மாவாவது? ஒளியாவது? உலகமே தடியடி தர்பாராகவும் கத்திச் சண்டையாகவும் இருக்கும்போது இந்த வேதாந்தம் என்ன செய்யப் போகிறது? அரசாங்கங்களே யோக்கியதை இல்லாமல் இருக்கும்போது தனிப்பட்ட மக்களிடம் பரிசுத்தம் எப்படி இருக்கும்? உலகத்தின் இருளை அதன் நடுவில் தோன்றும் ஒரு ஜீவனுடைய அந்தராத்மாவின் ஒளி என்ன செய்யும்? ஏதாவது ஒன்று அல்லது இரண்டு பெரியவர்கள் இருக்கலாம்......" என்று மகா சந்தேகப் பிராணியான என் நண்பர் முனகினர்.

"அப்படிச் சொல்லக்கூடாது. பெரியவர்கள் என்ருல் படித்துப் பட்டம் பெற்று பத்திரிக்கைகளில் பிரசித்தமான பெரியவர்கள்தான் என்று நினைக்காதீர்கள். சாதாரண ஜனங்களிலும் பெரியவர்கள் இருக்கிருர்கள். அவர்களால்தான் உலகத்தின் திமிர் ஒழியும். மாமூது, சங்கிலி இவர்கள் சரிதையைக் கேட்டால் என்னைப் போலவே நீங்களும் பேர் தெரியாத எத்தனையோ ஆத்ம பரிசுத்தர்கள் இருக்கிருர்கள் என்று கூறுவீர்கள். மாமூதின் சரிதையை நான் தெரிந்து கொண்டபோது இந்த உலகம் எல்லோரும் சொல்லுகிறபடி நாசமாய்ப் போய்விடாது, நமக்குத் தெரியாத எவ்வளவோ புண்ணியவான்களும் இருக்கிருர்கள் என்று நினைத்தேன்."

"மாமூதா? யார் அவன்? இந்து தேச சரித்திரத்திலே......"

"இல்லை. இல்லை. திருவல்லிக்கேணியில் ஒரு பெரிய மசூதி இருக்கிறதல்லவா?" என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டு அந்த சம்பவத்தைச் சொல்ல ஆரம்பித்தேன்.

மசூதி வாயிலில் உள்ள சாலையில் பிரமாண்டமான அரசமரம். அங்கே மரத்தடியில் மாமூது கிழிந்த ஆடைகளுடன் பதுங்கி உட்கார்ந்திருப்பான். வருவோர் போவோர்களை எல்லாம் உற்று உற்றுப் பார்ப்பான்.

மாமூது திருடனல்ல; போக்கிரியல்ல; அவன் ரொம்ப வணக்கமான பேர்வழி. இன்னும் சொல்லப் போனுல், அவன் காட்டும் குழைவிற்கும் வணக்கத்திற்கும் எல்லை கிடையாது. அப்படி இருந்தால் தானே அவனுக்கு யாராவது காலணு கொடுப்பார்கள்?

ஏகாங்கியான கிழ மாமூதுக்கு வாழ்வில் என்ன ஆசை இருக்கப் போகிறது? ஆனுல் உலகம் க்ஷேமமா யிருக்கவேண்டுமென்பது அவன் எப்போதும் செய்து வந்த பிரார்த்தனை. அப்போதுதான் இல்லை என்று சொல்லாமல் எல்லோரும் பிச்சை கொடுப்பார்களென்பது அவன் எண்ணம்.

பிரதி தினமும் காலையில் மரத்தடிக்கு வருவான். நாள்முழுதும் உட்கார்ந்திருந்துவிட்டு கிடைத்த செப்புக் காசுகளைக் கொண்டு ஏதாவது வாங்கிச் சாப்பிடுவான். பிறகு, மசூதி ஓரத்தில் பாருங்கல்லில் படுத்துக் கொள்வான்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. மத்தியானம் நெருங்க நெருங்க மாமூது வறுமையின் கொடுமையைவிட வெயிலின் கொடுமையைச் சகிக்கமுடியாமல் கஷ்டப்பட்டான்.

பிள்ளையார் கோயிலிலிருந்து 'ஜாம்ஜாம்' என்று மத்தியான பூஜை மணி முழங்கிக் கொண்டிருந்தது. அப்போது மாமூதுக் கருகில் "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டபடி ஒரு பேர்வழி வந்து உட்கார்ந்தான். யாரோ ஒரு கூலிக்காரன் களைப்பாற வந்திருக்கிருன் என்று நினைத்து மாமூது தன் காரியத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.

ஆனுல் அந்த ஆசாமி அந்த இடத்தை விட்டு சாயங்காலம் வரைக்கும் நகருகிற வழியாயில்லை. மறுநாட் காலையிலும் அவ்விடத்தில் விஜயம் செய்தான். "ஐயா! காலணு கொடுங்கள்" என்று அவனும் பிச்சை கேட்க ஆரம்பித்தான்.

மாமூது அந்தத் தொழிலில் கூட தனக்கு வந்த போட்டியைப் பார்த்தான். அவனுக்குப் பொல்லாத ரோஷம் வந்தது.

"இந்தப் பயலே இன்றிரவு; அச்சா! அப்படித்தான் செய்யவேண்டும். டேய், எனக்குப் போட்டியாகவா வருகிறாய். இருக்கட்டும்" என்று நினைத்து சங்கிலி யை முறைத்துப் பார்த்தான். அவன் நரைத்த மீசை தாடி கோபத்தால் துடித் துக்கொண்டிருந்தன.

"அண்ணே!" என்று கூப்பிட்டுக் கொண்டு சங்கிலி சிறிது நாழிகைக்கெல் லாம் மாமூது உட்கார்ந்திருந்த இடத் திற்கு வந்தான்.

"அண்ணனும் ஆச்சு! தம்பியும் ஆச்சு! ஜாவ், ஜாவ்" என்று மாமூதிட மிருந்து பதில் வந்தது. சங்கிலி பிரமித் துப் போய்விட்டான்.

"என் வவுத்திலே அடிக்க வந்ததுமில் லாமே நம்பள்கிட்ட பேச வற்றான்" என்றான் மாமூது கோபக்கண்களுடன்.

"கோவிச்சுக்காதே, அண்ணே! இந்த ஊர் புதிசு, தெரியாத்தனமாய் ஏதோ இங்கே பிளைப்புக் கிடைக்கும்னு வந்துட் டேன். வேலே அகப்படவில்லே. நாலு நாளாய் பட்டினி. பசி மயக்கமா யிருக்கு"

"நானும்தான் பட்டினி. நாம்பள் விருந்து சாப்படரான்னு எண்ணமோ?"

"நான் குளந்தை குட்டிக்காரன்......"

"அச்சா! அதுங்களே இட்டுக்கிட்டு கடல்லே விளுந்து செத்துப் போ" என்றான் மாமூது இரக்கமில்லாமல்.

சங்கிலிக்கு மாமூதின் பேச்சு வருத்தத் தையும் அதற்குப் பிறகு ஆத்திரத்தையும் உண்டாக்கிற்று.

"சீ! இது என்ன ஜனங்கள்! தாம் மட்டும்தான் பொளெக்கலாமாம். இத்தனே பேர் பொளெக்கும்போது எனக்கு மட்டும் இங்கே சாப்பாட்டுக்குக் கிடைக் காதா? ஆண்டவனே! என்னைத் துன்பப் படுத்தாதே. என்னால் தாங்கமுடியாது." என்று கதறிய வண்ணம் மாமூதைப் பார்த்தான். மாமூதின் வெறுப்பான பார்வை அவனுக்கு மகா வெறுப்பை உண்டாக்கிற்று. "தூ! நீ ஒரு மனுசன் மாதிரி" என்று காறி உமிழ வேண்டு மென்று சங்கிலிக்கு தாங்கமுடியாத ஆசை உண்டாயிற்று. நல்ல வேளையாக அவன் அப்படி ஒன்றும் செய்யவில்லே.

வானம் குமுறிக் கொண்டிருந்தது. மாமூதின் உடலும் மனமும் குமுறிக் கொண்டிருந்தன. பாவம்! அவன் இரண்டு நாளாய் சரியாகச் சாப்பிடவில்லே. அதற்கு மேல் இப்போது காய்ச்சல் வேறு.

"நானுந்தான் போனால் போகிற தென்று பார்க்கிறேன் . . . . உம்! இந்தப் பயலால் தானே என் வயிறு காய் கிறது... இன்றைக்கு செய்து விடட் டுமா?... அடேயப்பா! வேண்டாம் வேண்டாம்! என்று மாமூது மரத்தடி யில் சாய்ந்த வண்ணம் முனகினான்.

அப்போது மசூதியிலிருந்து நகரா ஒலித்துக் கொண்டிருந்தது. ஆஹா! அது எவ்வளவு இன்பமான நாதம்! அந்த இன்பத்துடன் ஒரு தாத்பரியமும் அல்லவா இருக்கிறது! நகராவை அடிக் கும்போது அதன் தோல் நடுங்குகிறதல் லவா? அப்போது கேட்போர் உடல் நரம் புகளே அதிர்த்து மனதை நெகிழ்வித்து ஆண்டவன்பால் சேர்ப்பிக்கிறதே!

மாமூது அந்த முழக்கத்தைக் கேட் டான். உடனே அவன் உடம்பு நடுங்கிற்று

"ஆண்டவனே! இந்தக் கெட்ட எண் ணத்தை துரத்திவிடு. ஐயோ! நான் எவ் வளவு கொலே பாதகன். சங்கிலி; பாவம்! அவன் என்ன செய்வான்? அவன் குழ ந்தை குட்டிகள் பாவத்தை நான் கொட்டிக்கொள்ள வேணுமா?" என்று நினைத்து வருந்தினான்.

இப்படி, மனப்புயல்களுக்கு மத்தியில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த மாமூது இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்த போது

"அண்ணே! காதுலே விழலேயா? ஏன் படுத்துக்கிட்டு இருக்கே. உடம்பு சுவ மில்லே?" என்று சங்கிலி கேட்டான் அத்தனே பற்களேயும் காண்பித்த வண் ணம். மாமூது ஒன்றும் பதில் சொல்ல வில்லே. அவன் தலே சுழன்றது.

"அடே! இப்படி உடம்பு கொதிக் கிறதே. இந்தா! எங்கிட்ட ஒரு அணு இருக்குது. அதை எடுத்துக்கிட்டு வண்டி யேறி உடனே ஆசுபத்திரிக்கு போ! உம்! கிளம்பு அண்ணே! அண்ணே!"

மாமூதுக்கு இதைக்கேட்டதும் மயிர்க் கூச்சல் எடுத்தது. சங்கிலியைப் பரிதாப மாய் பார்த்தான்.

"உன்னால் வண்டியிலே ஏறிக்க முடியுமா? நான் தூக்கி விடட்டுமா?"

"வேண்டாம்! நான் ஏறிக்கொள்கிறேன் நீ வீட்டுக்குப் போ. சங்கிலி!"

மாமூது மெதுவாக சாலை வழியே வண்டி நிற்கும் இடத்திற்கு வந்தான். அவன் மனதில் சந்தோஷத்துடன் கூடிய வேதனை குடிகொண்டிருந்தது. தலை வலியை அவனால் தாங்க முடியவில்லை. அப்படி இருந்தபோதிலும் சங்கிலியின் சமாசாரத்தை அவன் மறக்க முடியுமா?

"ஹூம்! இவனுக்கு எவ்வளவு தயவு? இவனைக் கெடுக்க வேணுமென்று நினைத்தேனே" என்று இவ்வாறு எண்ணியவன் சட்டென்று நின்றான்.

அவன் தேகத்தில் என்ன காரணத்தாலோ படபடப்பு உண்டாயிற்று. பாகனைக் கொன்று விட்டுப் போகும் யானையைப்போல் வேகமாய் நடந்தான்.

அவன் வந்து நின்றது ஒரு சாந்தமான இடம். எங்கும் அந்தகாரம் குடிகொண்டிருந்தது. அங்கே ஐந்தாறு குடிசைகள் தென்பட்டன. அந்தக் குடிசையருகில் வந்ததும் மாமூது உற்றுக் கவனித்தான். உள்ளே பேசிக்கொண்டது நன்றாகக் காதில் விழுந்தது.

"ஐயோ! இன்னக்கி ஒண்ணும் அம்புடலையா? கடவுள் இப்படி....."என்று ஒரு பெண்பிள்ளை வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள் இதைத் தொடர்ந்து குழந்தைகள் அழும்குரல்களும் கேட்டன.

"கவலப்படாதே, அஞ்சலை! வீட்டுங்களுக்குப்போய் பிச்சை எடுத்தாரேன் உனக்கு உடம்பு சரியாயில்லை. அலட்டிக்காதே" என்று சொல்லிவிட்டு சங்கிலி வெளியே போவதை மாமூது பார்த்தான்.

"ஓ! நான் நினைத்தபடி ஆகிவிட்டது. அவன் கையிலே ஒரு அணாதான் இருந்தது என்று எனக்குத் தெரியும். குழந்தைகளுக்குக் கூட இல்லாமல் அதை எனக்குக் கொடுத்திருக்கிறான். இவனல்லவா கடவுள்?" என்று எண்ணிய வண்ணம் மாமூது கல்போல் நின்றான்

"அப்புறம்?" என்று கேட்டார் இதுவரை பொறுமையாக இருந்த நண்பர் சந்தேகம்.

"அப்புறமென்ன? மாமூது உள்ளே போய் தான் சங்கிலிக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு அந்த ஒரு அணாவை அஞ்சலையிடம் கொடுத்துவிட்டு வெளியேறினான்."

"சங்கிலி என்ன செய்தான்?"

"பிச்சை எடுத்துக்கொண்டு வந்ததும் இந்த சமாசாரத்தைக் கேட்டுவிட்டு வந்த ஆசாமி மாமூதாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்து அவனைத் தேடி இருப்பான்...."

"ஐயோ பாவம். நிச்சயம் தேடியிருப்பான். அப்புறம் மாமூதை பார்த்தானா?"

"இல்லை. மாமூது அகப்படவில்லை"

"ஹூம்! மாமூது போன்ற பரிசுத்தமான ஆத்மாக்கள் உலகத்தில் இன்னும் இருக்கிறார்களா? சங்கிலி ரொம்ப நல்லவன். ஐயோ! இருவரும் கடைசியில் சந்தித்துக் கொள்ளவில்லையே. ஏன் மாமூது காணாமற் போனான்?" என்று கேட்டார் நண்பர் அடுக்கடுக்காக.

"ஒரு வேளை சங்கிலிக்குப் போட்டியாக இருக்கவேண்டாம். வேறு எங்கேயாவது போய் பிச்சை எடுத்து வாழலாம் என்று தோன்றியிருக்கும். அல்லது சங்கிலியின் வாழ்வைப் பார்த்து உலகத்தில் வெறுப்பு ஏற்பட்டு எங்கேயாவது காட்டுக்குப் போக வேண்டுமென்று தோன்றியிருக்கும்"

"உங்களுக்கு இந்த சம்பவத்தை யார் சொன்னார்கள்?"

"ஏன்? மாமூதே சொன்னான்!"

"ஆ! அப்படியா? அவன் எங்கே இருக்கிறான். அந்த ஞானியை நான் பார்க்கவேணும்"

"அவன் இந்த உலகத்தில் இல்லையே!"

ஐயோ! ஏன்? சுரம் வந்ததென்று சொன்னீர்களே! இறந்து போய்விட்டானா? ஹூம்"

"இல்லை. அவன் மனோ உலகத்தில் இருக்கிறான்"

"பூ! இவ்வளவும் கதையா? அத்தனையும் கற்பனைதானா? அதுதான் அப்பவே சொன்னேனே இதுமாதிரி யெல்லாம்உலகத்தில்..."என்று ஏதோ சொல்லியவண்ணம் அதிருப்தியுடன் வெளியேநடந்தார்.

"ஸ்வாமி! உலகத்தில் என்று என்னமோ ஆரம்பித்தீர்களே, முழுதும் சொல்லி விட்டுப் போங்களேன்" என்று நான் கெஞ்சுவதற்குள் அவர் மறைந்துவிட்டார்.

# தொழில் பயிற்சி

நாஜி அரசியல் வேதாந்தம் மகா மோசமானது; வெறுக்கப்படுவது. ஆனால் அதற்காக வேண்டி, அந்த அரசியலின் கீழ் ஏற்படும் எந்த ஸ்தாபனத்தையும் அல்லது ஸ்தாபனத்தின் நோக்கத்தையும் நாம் குறை சொல்லித் தள்ளிவிடக் கூடாது. இயந்திர பீரங்கி கொடிய ஆயுதம் தான். ஆனால் அந்த ஆயுதம் செய்வதிலிருக்கும் திறமையும் சாஸ்திரமும் சிறந்த உபயோகமுள்ள கப்பல் உற்பத்திக்கும் உபயோகிக்கப்படுகிறது.

நாஜிப் பிறப்பாக இருந்தால்கூட கருத்துக்களைத் தான் நாம் கவனிக்க வேண்டும். ஜெர்மனியிலே 18 வயதிலிருந்து 24 வயதிற்கு உட்பட்ட எல்லா இளைஞர்களும் ஆறு மாத காலம் கட்டாயமாக தொழில் சேவைக் கூடங்களில் இருந்து தொழிற் பயிற்சி பெற வேண்டும். அதற்குப் பிறகு இரண்டு வருஷங்கள் கட்டாய ராணுவப் பயிற்சி பெற வேண்டும். இந்தப் பயிற்சி பெண்களுக்குக் கட்டாயமில்லாவிட்டால்கூட அந்தத் தேசத்தில் பாதிப் பேர் பெண்கள் தாங்களாகவே உழைக்க முன் வருகிறார்கள். இளைஞர்கள் ஆறு மாத காலம், தண்ணீரை இறைப்பதிலும், நீர் சேரவிடாமல் நஞ்சை நிலங்களைக் காப்பாற்றுவதிலும், புயற் காற்றால் நிலங்களுக்குச் சேதமுண்டாகாதபடி மரங்களை விருத்தி செய்வதிலும், காலத்தைக் கழிக்கிறார்கள். மற்ற சாதாரண வேலையாட்கள் செய்யும் வேலை இவர்களுக்கில்லை. தினம் இவர்களுக்கு ஆறணா சம்பளம். சாதாரண தொழிலாளப் பெண்கள் பிரசவ காலங்களில் மேற்சொன்ன யுவதிகள் வேலை செய்ய வருகிறார்கள். விடுமுறையின்போதுகூட தொழிலாளர்களுக்குச் சம்பளமுண்டு.

காங்கிரஸ் அதிகாரப்பொறுப்பை எடுத்துக் கொண்டதிலிருந்து முற்போக்குத் திட்டங்களைக் கொண்டுவர சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. மாகாண அரசாங்கங்களுக்கு இந்தமாதிரி திட்டங்களைக் கொண்டுவரப் போதுமான பணம் இல்லை என்பது வாஸ்தவம். ஆனால் இந்த தேசத்தில் ஏராளமான தொழிற் செல்வம் இருக்கிறதே?

நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், 18 வயதிலிருந்து 25 வயதிற்குட்பட்ட இளைஞர்களை 18 மாதங்களாவது கட்டாயமாகத் தொழில் செய்ய வேண்டுமென்று சட்டம் போட வேண்டும். மலேரியாவுக்குக் காரணமான நீர்த் தேக்கத்தைத் தடுக்கத் தண்ணீர் இறைக்கவும், இன்னும் பல வேலைகளுக்கும் அவர்கள் உபயோகிக்கப்படலாம்; கிராமங்களுக்கு ரஸ்தா போடச் செய்யலாம். ஆறு மாத காலம் தேக உழைப்பு முடிந்ததும், கிராம வாசிகளுக்கு, தகுந்த வழியைக் கொண்டு, ஆரம்பக் கல்வியைப் போதிக்க அவர்களை அனுப்பவேண்டும். சுகாதாரம், வைத்தியம் இவைகளை கிராமவாசிகளுக்குப் போதிக்கவேண்டும். நமது பெண்களுக்கும் கல்வி,சுகாதாரசம்பந்தமான விஷயங்களில் எவ்வளவோ உழைக்க இடமிருக்கிறது.

இளைஞர்கள் இப்படிச் செய்வதால் மிகவும் உபயோகமுண்டு. அத்துடன் அவர்கள் கிராமங்களைப் பற்றி நேர்முகமாக உண்மையை அறிய முடிகிறது. கிராமத்திலுள்ள படுமோசமான வாழ்வையும், வறுமையையும் தாங்களாகவே தெரிந்து கொண்டு, ஏழைகளுக்காகச் சண்டை போட முன்வருவார்கள்.

இப்படி எல்லாம் இளைஞர்களை வேலை செய்யச் சொல்லி அவர்கள் படிப்பைக் கெடுக்கலாமா என்று கேட்கலாம். வாழ்க்கைதான் சிறந்த பள்ளிக்கூடம்; உண்மையில் நடப்பதைத் தெரிந்து கொள்வது தான் நல்ல பாடம். இளைஞர்கள் கிராமங்களிலிருந்து சிறந்த அனுபவத்துடன் திரும்புவார்கள். எந்த சர்வகலாசாலையும் இந்த அனுபவ சம்பத்தைக் கொடுக்க முடியாது.

தேசத்தைப் பற்றி ஒவ்வொருவரும் கவலை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் முன்னேற்றம் ஏற்படுமா? மத்திய மாகாண சர்க்கார் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்ப

தாகத் தெரிகிறது. ஒரு வருஷம் கிராம சேவை செய்திருந்தாலொழிய காலேஜில் எந்த மாணவனும் சேர்த்துக் கொள்ளப் படமாட்டான் என்பது உத்தரவு. இந்த உத்தரவு இரண்டு காரணங்களுக்காக ஒப்புக் கொள்ளக்கூடியதாக இல்லை. ஒரு மாணவன் மெட்ரிகுலேஷன் தேறும் போது பதினாறு வயதுடையவனாக யிருப்பான். அவ்வளவு சிறு வயதில் அவன் என்ன செய்யமுடியும்? கிராம வேலைக்கு சற்று பெரிய சிறுவர்களும் சிறுமிகளும் வேண்டும். இன்னும் இளைஞர்கள் இந்த வேலையில் தன்னந்தனியே விடப்படுவதால், அவர்கள் என்ன செய்வது என்றே தெரியாமல் இருப்பார்கள். பல மாணவர்கள் ஒரே கிராமத்துக்குப் போய் விடலாம்; சில கிராமங்கள் கவனிக்கப் படாமலே போய் விடலாம். இவைகளை எல்லாம் கவனித்து நிர்வகிக்க ஓர் மத்திய ஸ்தாபனம் இன்றியமையாதது.

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் இதற்காக ஒரு கமிட்டி நியமித்தல் நல்லது. அக்கமிட்டி மாகாண அரசாங்கங்களுக்கு தகுந்த சட்டமியற்ற ஆலோசனை கூறும். இது மாதிரி திட்டங்களை அவசரப் பட்டோ, அரைகுறையான சட்டங்களாலோ கெடுக்கக் கூடாது. ஹரிஜன்.

# ஜெர்மன் மனோபாவம்

1914 வருஷத்தில் ஜெர்மனி எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலைக்கு இப்பொழுது திரும்பவும் வந்துவிட்டது. அப்பொழுது ஜெர்மனியின் மமதைக்கும் சக்திக்கும் ஆயுத பலத்திற்கும் அளவே இல்லை. மகா யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மானியர்களின் மனது ஒடுங்கிச் சவமாகி விட்டது. வார்லேல்ஸ்சமாதானம் ஜெர்மனியின் கௌரவத்தையும் வலிமையையும் சின்னுபின்னப் படுத்தி விட்டது. எனவே மகாயுத்தம் நின்ற பிறகு ஜெர்மானியர்கள் தங்கள் தேசீய கௌரவத்தையும் மானத்தையும் வல்லமையையும் மீளப்பெறுவதையேதங்கள் மதமாக்கிக் கொண்டுவிட்டனர். ஜெர்மானியர்களுக்கு மூலப் பொருள்களிலோ ரஷியவயல்களிலோ குடியேற்ற நாடுகளிலோ அவ்வளவு குறி இல்லை. ஆனால் அவர்கள் வேண்டுவது வெற்றி. வார்ஸேல்ஸ் மூலம் அடைந்த அவமானத்தைச் சோடு தெரியாமல் அழிப்பதே அவர்கள் கொள்கை.

ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும், அமெரிக்கர்களும் ஜெர்மானியர்களுடைய மனோபாவத்தைச் சரியாக அறிந்து கொள்ளாத வரையில், ஐரோப்பிய சமாதானத்திற்கு வழி இல்லை. ஜெர்மனி மூன்று நூற்றுண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகப் போர் வீரர்களாலேயே ஆளப்பட்டு வந்திருக்கிறது. ஜெர்மனியில் மட்டும்தான் புரட்சி ஏற்பட்டதே கிடையாது. குடியானவர் யுத்தத்தைத் தூண்டிய மார்ட்டின் லூதரே அதை பின்பு எதிர்த்தார். 1848-ம் வருஷத்தில் ஏற்பட்ட புரட்சி யாதொரு பலனையும் தராமல் சில வாரங்களிலேயே ஒடுங்கிப் போயிற்று. 1918-ம் வருஷம் ஏற்பட்டது புரட்சியே அல்ல.

ஜெர்மானியப்பிரஜைகள் சமஉரிமைகளைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. போர் வீரர்களிடம் அரசியலை ஒப்படைப்பதில் அவர்களுக்கு ஆக்ஷேபணையே இல்லை. அப்படி ஒப்புவித்து விடுவதில் போர் வீரர்களுக்கும் கொண்டாட்டம்தான். அதன் விளைவாக அவர்கள் மண்டை கொழுத்துவிடுகிறது; ஆனால் மூளை வளர்வதில்லை. சாதாரண ஜெர்மன் பிரஜைகள் படிப்பிலும் தொழில் வளர்ச்சியிலும் நிம்மதியாய் ஈடுபட்டு விடுகிறார்கள். இந்த மனோபாவம் ஜெர்மனியர்களிடை இருக்கும் மட்டும் அவர்கள் தேசத்தைக் காப்பது அறிவல்ல மிருகபலமே என்று எண்ணுவது இயற்கையே. மிருக பலத்தை வணங்குவதும் இயற்கையே. இந்த ஸ்திதியில் மகாயுத்தம் முடிவடைந்த பிறகு ஜெர்மனியர்கள் சண்டையைத் தொடங்கவே இல்லையென்றும் அவர்கள் தோல்வியும் அடையவில்லையென்றும், யூதர்களும், அபேதவாதிகளும் சேர்ந்து சூழ்ச்சி செய்து ஜெர்மனியைப் படுகுழியில் தள்ளி விட்டனரென்றும் ஜெர்மன் தலைவர் ஹின்டன்பர்க் ஜனங்களிடையே பிரசாரம் செய்யத் தலைப்பட்டவுடன் அவர்கள் அதை நம்பி

விட்டார்கள். இன்றும் ஜெர்மானியர்கள் அவ்வாறே நினைக்கிறார்கள். தங்கள் மக்களுக்கும் அதே பாடத்தைச் சொல்லித் தருகிறார்கள். ஆகவே மாண்டுபோன கௌரவத்தையும் கீர்த்தியையும் மீண்டும் திரும்பப் பெறுதவரையில் அவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். இந்த சூழ்ச்சிக்கும் தோல்விக்கும் முக்கிய காரணம் பிரான்சல்லவா? பிரெஞ்சு எல்லைக்குள் பட்ட வார்ஸேய்ஸில் தானே ஜெர்மனி வீழ்ச்சி உண்டாயிற்று? அங்கேயே ஒரு ஜெர்மன் சாம்ராஜ்யத்தை உண்டாக்கிவிட வேண்டுமென்று கனவுகண்டார்பிஸ்மார்க்.

(எமிம் லட்விக் என்ற ஜெர்மன் பேராசிரியர் எழுதியிருக்கும் கட்டுரை ஒன்றின் சுருக்கம்.)

# ஆத்மாவை இழந்த ஐரோப்பா

ஏழு நாள் வாழ்விற்காக ஐரோப்பா தன் ஆத்மாவை விற்றிருக்கிறது. மியூனிச் ஒப்பந்தத்தால் ஏற்பட்ட ஐரோப்பிய சமாதானம் பலாத்காரத்தின் வெற்றி; அது பலாத்காரத்தின் வீழ்ச்சியுமாகும். இங்கிலாந்தும் பிரான்சும் தங்கள் வெற்றியில் நம்பிக்கை வைத்திருந்தால் ஸெக் தேசத்திற்காகச் சண்டைபோட்டு அந்தச் சண்டையினால் வாழவோ அல்லது வீழவோ இசைந்திருப்பார்கள். ஆனால், ஜெர்மனி இதாலியின் ஒருமித்த பலாத்காரத்தின் முன் நடுங்கிப் போய் விட்டார்கள். மனித வர்க்கத்தின் ஆத் ஐசுவரியத்திற்கு இக்காரியத்தால் அவர்கள் என்ன சேர்த்துக் கட்டிவிட்டார்கள்?

ஸெக் தேசத்தார் அஹிம்ஸையை பாதுகாப்புக் கருவியாகக் கொண்டிருந்தால் ஜெர்மனியின் முழு சக்தியையும் எதிர்த்திருப்பார்கள். உண்மையில்லாத ஒரு சமாதானத்திற்காக முயன்ற பிரான்சையும் இங்கிலாந்தையும் அவமானத்திலிருந்து காப்பாற்றி இருக்கலாம். தங்கள் கௌரவத்தை நிலைநாட்ட, எதிரியின் ரத்தத்தைச் சிந்தாமல் ஒவ்வொருவரும் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கலாம். இந்த மாதிரி வீரம் மனிதனுக்கு இருக்க முடியாது என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை. மனிதத்தன்மை என்பது மிருகத்தன்மையும் காட்டுமிராண்டித் தனத்தையும் ஒழிப்பது என்பதை நன்றாக அறிந்தால் தான் அதன் தாத்பர்யத்தை அறியலாம். நாம் மனிதர்களாய் இருந்த போதிலும் கூட நமது முதாதையர்களான குரங்குகளின் தன்மை நம்மிடம் இன்னும் கொஞ்சம் இருக்கிறது.


அஹிம்ஸா தர்மத்தை அனுசரிக்கும்படி ஸெக் தேசத்தாரை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய எதிர்காலம் என்ன என்பது அவர்களுக்கே தெரியாது. அஹிம்ஸையைக் கடைப்பிடித்தால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. ஸ்பெயின் விதி ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அப்படித் தான் சைனாவும். இந்தத் தேசங்கள் தோற்றுப் போனால், அவைகள் கட்சி அநியாயமானது என்பதற்காகவல்ல. கொலைத் தொழிலில் அவைகளுக்குப் போதிய சாமர்த்தியம் இல்லை என்பதற்காகத்தான். யுத்தத்தில் எதிர்த்து மடிவது வீரமென்றால், எதிரிக்கு விட்டுக் கொடுக்காமல், ஆனால் யுத்தத்தில் சண்டைபோடாமல், மடிவது அதைவிட வீரம். இந்த இரண்டு விதங்களாலும் சாவு நிச்சயம் என்று இருக்கும்போது, எதிரியின் மேல் வெறுப்பு இன்றி திறந்தமார்புடன் சாவது உயர்வல்லவா? —'ஹரிஜனில்' காந்திஜீ.

# சினிமாச் சுருள்

இன்ப சாகரன் வெகு வேகமாகத் தயாராகி விட்டதென்றும் விரைவில் இன்பமாய் வெளிவரப் போவதாகவும் சொல்லி நமது கவலையை நீக்குகிருர்கள். இது வரை சினிமாப் பார்க்கப்போய்த் துன்ப சாகரத்தில் ஆழ்ந்து பரிதவிப்பவர் களுக்கெல்லாம் 'இதோ உங்களை இன்ப சாகரத்திற்குத் தயாராக்கிக் கொள்ளுங்கள்' என்று எச்சரிக்கிறேன்.

* * *

என் நண்பருக்கு ஒரு அபூர்வ சந்தேகம். "ஏனய்யா, ஒரு படத்திற்குப் போய் 'அதிர்ஷ்டம்' என்று பெயர் வைப்பார்களா?" என்று அவர் என்னுடன்சண்டைக்கு வந்தார். ஒரு வேளை 'துரதிருஷ்டம்' என்று பெயர்வைத்தால் அவர் சந்தோஷப் பட்டிருப்பாரோ என்னமோ!



இன்பசாகரனில் ஓர் காக்ஷி.

"பெயர் எப்படி வைத்தால் என்ன? அதிர்ஷ்டம் என்று பெயர் வைத்தாலாவது படம் ஒரு அதிர்ஷ்டத் தமிழ்ப் படமாக இருக்காதா, பார்ப்போம்" என்று சொல்லி அவரைச் சமாதானப் படுத்தி அனுப்பினேன்.

காரனேஷன் பிக்சர்ஸ் கம்பெனியில் திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு 'ஸ்டண்ட்' படத்தைத் தயாரிக்கப் போவதாகக் கூறுகிருர்கள். முன் எச்சரிக்கையாகவே இப்படி உண்மையைக் கூறியிருப்பதை நாம் பாராட்ட வேண்டும்!

* * *

இதுவரை பட முதலாளிகளால் அநியாயமாய்ப் புறக்கணிக்கப்பட்டிருந்த திருநீலகண்டருக்குச் சுக்கிரதசை பிறந்திருக்கிறது. ஸ்ரீ தியாகராஜ பாகவதர் 'திருநீலகண்ட நாயனுராக' நடிக்கப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது. மேற்கண்ட வாக்கியத்தை இந்தப் பத்திரிகையில் போடாமல் எங்கேயாவது சட்ட சபையில் யாராவது பேசி யிருப்பதாக வைத்துக் கொண்டால், தாமும் அந்தச் சட்ட சபையில் மெம்பராக இருப்பதாக வைத்துக் கொண்டால், 'நடிக்க' என்ற வார்த்தையை நீக்கி விட்டு 'பாட' என்ற வார்த்தையைப் போடும்படி திருத்தப் பிரேரணை கொண்டு வந்திருப்பே னென்று என் நண்பர் தெளிவாக அறிவிக்கிருர். நான் அப்

படி ஒன்றும் 'வைத்துக் கொள்ளப்' போவதில்லை. மேற் சொன்ன 'திருநீலகண்ட நாயனர்' என்னும் படத்தில் ஸ்ரீ ராஜா சாண்டோவும் சம்பந்தப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ராஜா சாண்டோவுக்கு 'நடிப்பு' சொல்லிக் கொடுக்க வேண்டிய வேலையாம். அதற்குச் சம்பளம் ரூ 8000 என்றும் சொல்கிறார்கள். ஆனல் அவர் டைரக்டர் அல்ல; நடிப்பு சொல்லிக் கொடுப்பவர்தான் என்ற விஷயம் மட்டும் வற்புறுத்தப் படுகிறது.

* * *

சென்னை ராயப்பேட்டையில் புதிதாகக் கட்டப் பட்டிருக்கும் சாகர் தியேட்டர் சென்ற சனிக்கிழமை யிலிருந்து ஆரம்பமாகிவிட்டது. தியேட்டர் ரொம்ப சௌகர்யமாக இருக்கு மென்று சொல்கிறார்கள். தியேட்டர் காரருக்கு மட்டும் அது சௌகர்யத்தைக் கொடுப்பதல்லாமல் சினிமாப் பார்க்கப் போகிறவர்களுக்கும் கொஞ்சம் சௌகர்யத்தைக் கொடுக்கக் கூடியதா யிருக்கிறதா என்று ஒரு தடவை போய்ப் பார்க்க வேண்டும்.

உலகப் புகழ்பெற்ற ரோனல்ட் கோல்மன் சமீபத்தில் மண முடித்ததாகக் கூறும் செய்தி கேட்டு வாசகர்கள் சந்தோஷப்படுவார்கள் என்று நம்புகிறோம்.

* * *

ஸாம் கோல்ட்வின் என்ற பிரபல அமெரிக்கப் பட முதலாளி மகா சாமர்த்திய சாலி என்று தெரிகிறது. அமெரிக்கா குடியரசுத் தலைவர் ரூஸ் வெல்டை ஓர் படத்தில் நடிக்கச் செய்ய வேண்டுமென்று அவர் கஜகர்ணம் போட்டுப் பார்த்தும் முடியவில்லை. நடிப்பு தொழிலாகக் கொண்டவர்கள் நடிக்கும் எந்தப் படத்திலும் ரூஸ் வெல்டை சம்பந்தப்படுத்த முடியாது என்று அதிகாரிகள் அறிவித்து விட்டார்களாம். காந்திஜீக்குக் கூட சினிமா, போட்டோ கருவிகளைக் கண்டால் பிடிக்கவில்லை. ரொம்பப் பெரிய மனிதர்களாக யிருக்க வேண்டுமென்ருல் காமிராக் கண்ணுடியை வெறுக்கவேண்டும் என்ற விஷயத்தைப் பட்டணத்தில் சில 'முக்கியஸ்தர்கள்' தெரிந்து கொள்வது நல்லது.



சியாமசுந்தரில் ஸ்ரீ. தவமணிதேவி